உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2050 ஐப்பசி / அக்-நவம்பர் 2019 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

# தேசத்தின் குரல்

## காசுமீரத்தைத் தொடர்ந்து அயோத்தி

கடந்த 2019 ஆகஸ்டு 5ஆம் நாள் காசுமீரம் தொடர்பான அமித்ஷாவின் அதிரடி அறிவிப்பு அத்தேசத்தைக் கூண்டிலடைத்தது.

நவம்பர் 9ஆம் நாள் உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்புசார் ஆயம் வழங்கிய தீர்ப்பு அயோத்தியில் இடம்பெற்ற பாபர் மசூதியை இரண்டாம் தடவை இடித்துப் போட்டது.

முதல் முறை 1992 நவம்பர் 6ஆம் நாள் பாபர் மசூதி என்ற சற்றொப்ப ஐந்நூறு ஆண்டுகாலக் கட்டமைப்பு இந்துத்துவக் காவிக் கரசேவகர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இரண்டாம் முறை 2019 நவம்பர் 9ஆம் நாள் பாபர் மசூதியை மீளக் கட்டி விடுவோம் என்று இசுலாமியரும் சமயச் சார்பின்மையில் நம்பிக்கை கொண்டோரும் கண்டு வந்த நற்கனவு கருப்புக் குப்பாயம் அணிந்த நீதியக் கரசேவகர்களால் இடித்து நொறுக்கப்பட்டது.

காசுமீர மக்கள் காலவரையற்ற முறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள். விடுதலைப் போராட்டக்கரர்கள் முன்பே சிறை வைக்கபட்டு விட்டார்கள். ஆசாதி என்பது

## உள்ளே...

1. தேசத்தின் குரல் -1
2. காசுமீரம் யாருக்கு -7
3. பாபர் மசூதியா? இராமர் கோயிலா? உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நியாயமானதா? -8
4. நவம்பர் புரட்சி நாள் கருத்தரங்கம் -9
5. பொருளாதார முடக்கத்தை முடுக்கிவிடும் ஒன்றியம் -9
6. தோழர் பெ.மணியரசனுக்கு மறுமொழி (6) நேர்வகைத் தமிழ்த் தேசியமும் எதிர்வகை இந்தியத் தேசியமும்-16
7. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(1) -19
8. ஃபிடலால் ஆட்கொள்ளப்பட்டு -38
9. நான் ஏன் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்? வே.செல்வமுருகன் -41

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

காசுமீரிகளின் பொது முழக்கம் ஆகி விட்டதால் அவர்களை மொத்தமாகச் சிறையிலடைக்க எண்ணியது இந்தியப் பேரரசு. அவர்களுக்கும் கூட உரிமை மறுப்பு புதிதன்று. உறுப்பு 370 பெயரளவுக்குத்தான் சட்டப் புத்தகத்தில் இருந்தது. இப்போது அதையும் நீக்கியாகி விட்டது. அவர்கள் அரைச் சிறையிலிருந்து முழுச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஐம்பது இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்டோரை அடைத்து வைக்கக் காசுமீரத்திலோ இந்தியா முழுவதிலுமோ சிறைகள் போத மாட்டா என்பதால் அவரவர் வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். வீட்டுச் சிறை என்ற மங்கல வழக்கின் பின்னால் சிறையுரிமைகள் கூட இல்லாத கொடுஞ்சிறை மறைந்துள்ளது. காசுமீரத்துக்கு இது புதிதன்று. எது புதிதென்றால் தில்லியின் கண்காணிகளாகச் செயல்பட்டு வந்த மெஹ்பூபா, ஒமர் அப்துல்லா உள்ளிட்ட முன்னாள் முதல்வர்களும் கூட வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதுதான். பாஜக ஆதரவு பெற்று சிறிநகர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் ஜுனைத் அசீம் மட்டு என்பவரும் தில்லியின் நடவடிக்கைகளைக் குறை கூறிய பின் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு விட்டார்.

ஊரடங்கும் தொலைப்பேசி, இணையச் சேவைத் துண்டிப்பும் படைக்குவிப்பும் இராணுவத்தின் நரவேட்டையுமாக… அடக்குமுறைகளின் அணிவரிசை நீள்கிறது. இயல்புநிலை மீட்புக்கான ஒடுக்கத்தளர்ச்சி என்பதெல்லாம் காசுமீரப் பள்ளத்தாக்குக்குச் சற்றும் பொருந்தாது.

கண்முன்னே இத்தனைக் கொடுமைகள் நடக்கும் போது இந்திய உச்ச நீதிமன்றம் என்ன செய்து கொண்டிருக்கிறது? உரிமைமறுப்பால் பாதிப்புற்றவர்கள் நீதிமன்றப் படிகளேறி வருவதற்காகக் காத்திராமல் நீதியே அவர்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்று நீதியர் வி.ஆர். கிருஷ்ணய்யர் சொன்னது ரஞ்சன் கோகோய்களுக்குத் தெரியாதா? திகார் சிறை தொடர்பான ஒரு வழக்கில் கிருஷ்ணய்யர் கூறியது திறந்தவெளிச் சிறையாக்கப்பட்டுள்ள காசுமீரத்துக்குப் பொருந்தாதா? யாரும் விண்ணப்பிக்காமலே (suo motu) எடுத்து விசாரிக்கப் பொருத்தமான வழக்கு இஃதென்று 'நீதிதேவர்கள்' கருதவில்லையா? காந்தியின் மந்திப் பொம்மைகளைப் போல் கண்ணையும் காதுகளையும் வாயையும் இறுகப் பொத்திக் கொண்டு விட்டார்களா அவர்கள்'? இது ஓர் எச்சரிக்கை!

சரி, காசுமீரம் குறித்து வந்துள்ள நீதிப்பேராணை விண்ணப்பங்கள் மீது உச்ச நீதிமன்றம் என்ன செய்துள்ளது? ஆட்சியாளர்களின் சட்டத்தகுநிலை மாற்றத்தைக் கேள்விக்குள்ளாக்கும் உரிமை நிலைநிறுத்த (Writ of mandamus) வழக்குகளை மட்டுமன்று, உடனடி நடவடிக்கைக்குரிய ஆட்கொணர்வு வழக்குகளையும் (Writ of habeas corpus) பதறாமல் தள்ளிப் போட்டுள்ளது. முன்னாள்

முதல்வர், முன்னாள் நடுவண் அமைச்சர், வெளிப்படையான இந்திய விசுவாசி பரூக் அப்துல்லா குறித்து "அவர் தாமாகவே வீட்டுக்குள் இருக்கிறார், அவரை நாங்கள் காவலில் வைக்கவில்லை" என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா நாடாளுமன்றத்திலேயே விளக்குகிறார். இது உண்மையில்லை என்று பரூக் அப்துல்லாவே மறுக்கிறார். "அவரைச் சென்னை மறுமலர்ச்சி திமுக மாநாட்டுக்கு அழைத்துள்ளோம்" என்று சொல்லி வைகோ உச்ச நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு நீதிப்பேராணை வழக்குத் தொடுக்கிறார். இதற்கென்ன அவசரம் என்பது போல் வழக்கைத் தள்ளிப்போடுகிறது தலைமை நீதியர் இரஞ்சன் கோகோய் தலைமையிலான ஆயம். அரசோ உடனே பரூக் அப்துல்லா மீது பொதுப் பாதுகாப்புச் சட்டம் (Public Safety Act) என்ற கொடுஞ்சட்டத்தை ஏவுகிறது. இது ஓர் எச்சரிக்கை!

மார்க்சியக் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் எச்சூரி தன் கட்சியை சேர்ந்த முகமது யூசுஃப் தாரிகாமியைப் பார்க்க காசுமீரத்துக்குச் செல்ல இந்திய உச்ச நீதிமன்றத்திடம் அனுமதி கேட்கிறார். இந்தியக் குடிமகன் இந்திய ஆட்சிப்புலத்தின் எந்தப் பகுதிக்கும் செல்வது அடிப்படை உரிமை என்று திறந்த நீதிமன்றத்தில் நீதியர் கருத்துரைக்கின்றனர். (இப்படியெல்லாம் 'கமெண்ட்' அடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் உள்துறை அமைச்சர்). முடிவில் அவர் காசுமீரம் சென்று தாரிகாமியை (தாரிகாமியை மட்டும்) பார்த்து வர நீதிமன்றம் அனுமதிக்கிறது. சிறை நேர்காணலைப் போலவே நேரம், மற்ற கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டுத்தான்! காசுமீரம் இந்தியாவின் பிரிக்கவொண்ணாப் பகுதிதான் என்று செங்கொடி மேல் ஆணையிட்டுச் சொல்லும் கட்சியின் தலைவருக்கே இந்நிலை! இது ஓர் எச்சரிக்கை!.

இத்தனை எச்சரிக்கையும் யாருக்குத் தெரியுமா? நீதிமன்றத்தை நம்பியிருக்கும் நண்பர்களுக்குத்தான்! அரசமைப்புச் சட்டத்தை முதலில் திருத்தாமல், உறுப்புகள் 370, 35A ஆகியவற்றைச் சாகடித்ததும், சம்மு-காசுமீர மாநிலத்தை இரண்டாக உடைத்து ஒன்றிய ஆட்சிப் புலங்களாகத் தகுநிலை தாழ்த்தியதும் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானவை என்பதால் நீதிமன்றத்தில் அடிபட்டு விடும் என்று இலவுகாத்த கிளி போல் நம்பிக் காத்திருக்கும் நண்பர்களுக்குத்தான்!

காசுமீரத்துக்கான உறுப்பு 370 இந்துத்துவக் கும்பலின் உயிர்க் கொள்கை! பாபர் மசூதியை இடித்து விட்டு அதே இடத்தில் இராமர் கோயில் கட்டுவது இந்துத்துவக் கும்பலின் மற்றோர் உயிர்க் கொள்கை! இந்த இரு உயிர்க் கொள்கைகளுக்காகவும் எத்தனை உயிர்களைப் பலியெடுக்கவும்

தயங்க மாட்டார்கள். இந்த அக்கிரமங்களை நீதிமன்ற வழக்குகளால் தடுத்து விட முடியும், என்று நம்புவது மூடத்தனம். சீறிப் பாயும் தோட்டாவை உள்ளங்கையால் தடுக்க முடியுமா?
இந்துத்துவ நச்சாற்றல்களின் கொடுந்தாக்கைத் தடுக்கவோ எதிர்க்கவோ முறியடிக்கவோ 'சமயச் சார்பற்ற' எதிர்க்கட்சிகளால் என்ன செய்ய முடிந்தது? பாபர் மசூதி இடிப்பு என்றாலும் சரி, காசுமீரச் சிறையடைப்பு என்றாலும் சரி, பாசகவுக்கு நிகராகக் காங்கிரசும் கேடு செய்ததை மறக்கவோ மறுக்கவோ முடியுமா? காசுமீர மக்களை வஞ்சிக்க சவகர்லால் நேரு அடித்த கூத்துகளின் தொடர்ச்சிதான் நரேந்திர மோதி - அமித் ஷா - அஜித் தோவல் கும்பலின் இப்போதைய அடக்குமுறை என்பதும் வெள்ளிடை மலை.

பாபர் மசூதியில் 1949ஆம் ஆண்டு இராமர் சிலையைத் திருட்டுத்தனமாக உள்ளே கொண்டுபோய் வைத்தது சட்டப் புறம்பானது என்று உச்ச நீதின்மன்றம் சொல்கிறது. அப்போது இந்திய அளவிலும் உத்தரப் பிரதேச அளவிலும் ஆட்சி புரிந்தது காங்கிரஸ்தான். 1986ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் இராமபக்தர்கள் உள்ளே நுழைந்து வழிபட அனுமதி தந்தவர் காங்கிரஸ் தலைமையமைச்சர் இராசிவ் காந்திதான். 1992 திசம்பர் 6ஆம் நாள் அயோத்தியில் அத்வானி கும்பல் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய போது தில்லியில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் காங்கிரஸ் தலைமையமைச்சர் நரசிம்ம ராவு. உடனே அவர் ஒரு சத்திய வாக்குக் கொடுத்தார். அதே இடத்தில் பாபர் மசூதியை மீளக் கட்டிக் கொடுப்போம் என! இதில் ஏதாவது சோனியாவுக்கும் ராகுலுக்கும் திக்விஜய் சிங்குக்கும் நினைவிருக்கிறதா?
காசுமீரத்தில் இந்தியத் தேசிய இடதுசாரிகளின் நிலைப்பாடு எப்போதுமே இந்தியப் பேரரசியத்துக்கு வால்பிடிப்பதுதான். இப்போதும் கூட காசுமீரத்தின் மீதான இராணுவ முற்றுகை என்றெல்லாம் வாயளக்கிறார்களே தவிர, காசுமீர மக்களின் தன்தீர்வுரிமைக்குக் குரல்கொடுக்கவோ, குடியாட்சியத் தீர்வை வலியுறுத்தவோ, சிறுமக் கோரிக்கையாகப் படைவிலக்கம் கோரவோ கூட அவர்களுக்கு மனம் வரவில்லை.
பாபர் மசூதி இருந்த இடம் முழுவதையும் இராமர் கோயில் கட்டுவதற்குத் தந்து விட வேண்டும் என்ற அடாத உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்தவுடனே அதற்குத் துள்ளிக் குதித்து வக்காலத்து வாங்கியவர் செந்துண்டு அணிந்த தா. பாண்டியன். வெட்கம்! வெட்கம்! கடந்த காலத்தில் பாபர் மசூதியை இடிக்க விட மாட்டோம் என்று முழங்கியவர்கள், இடித்த பின் வன்மையாகக்

கண்டித்தவர்கள், இடித்த இடத்தில் மீளவும் மசூதி கட்டப்படுவதற்கு வலுத்த எதிர்ப்புத் தெரிவித்தவர்கள்... இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு 'மதிப்பு' அளிப்பதும், கோப்பை மூடச் சொல்வதும் எப்படி ஞாயமாகும்?


தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்கள் என்று தன்விருது பூண்ட திக, திமுக போன்ற கட்சிகள் இந்தத் தீர்ப்பை மதிக்கச் சொல்வதும், ஒத்துப் போகும் படி அறிவுரை சொல்வதும் நமக்கு அதிர்ச்சியளிக்கவில்லை. இவர்கள் எப்போதும் இப்படித்தான் என்பதை நாமறிவோம். இவர்களின் இந்தச் சரணாகதி நிலைப்பாட்டைக் காசுமீர் தொடர்பாகவும் பார்த்தோம்.

காசுமீரம் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டையும், இராமர் கோயில் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் எதிர்த்துப் பயனில்லை என்ற எண்ணம் பொதுமக்களிடம், குறிப்பாகச் சிறுபான்மை மக்களிடம் பரவியிருப்பதுதான் கவலைக்குரியது. நெருக்கடி நிலைக் காலத்தில் இந்திரா காந்தியை எதிர்த்துப் பயனில்லை என்ற கருத்தை ஏற்படுத்தியது போல், இப்போது ஆர்எஸ்எஸ் நினைத்ததை முடிக்கும், நம்மால் தடுக்க முடியாது என்ற எண்ணத்தை ஏற்படுத்த முயல்கின்றனர். சட்டப்படி பார்த்தாலும் உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்குப் பிறகு நம்மால் என்ன செய்ய முடியும்? என்ற கேள்வி எழுப்பபடுகிறது.

சல்லிக்கட்டு மீதான உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்புக்குப் பிறகுதான் மெரினாவில் தமிழ் வசந்தம் கூடித் தமிழக அரசைப் புதிய சட்டம் இயற்றச் செய்தோம். சபரிமலை கோயிலில் பெண்கள்


**கார்ல் மார்க்சின் பெரும்படைப்பு**

**மூலமுதல்**



***இயல் ஒன்று (தூய தமிழாக்கம்)***

***முன்வெளியீட்டுத் திட்டம்***

***முன்வெளியீட்டுத் திட்டத்தில் சேர படி ஒன்றுக்கு 600 உருவாய் செலுத்துங்கள்!***

***நன்கொடையும் தரலாம்!***

***நன்கொடை ஆனாலும் முன்வெளியீட்டுக் கட்டணம் ஆனாலும், உங்கள் பங்களிப்பைப் பின்வரும் வைப்பகக் கணக்கில் செலுத்தி விட்டுத் தெரியப்படுத்துங்கள்.***

K. THIAGARAJAN,

SB A/C No. 20654748511,

ALLAHABAD BANK / AMBATTUR BRANCH,

CHENNAI - 53.

IFSC: ALLA0211909

நுழைவு தொடர்பான இறுதித் தீர்ப்பை இன்னும் பெரிய ஆயத்தின் மீளாய்வுக்கு அனுப்பவில்லையா? இராமர் கோயில் தீர்ப்பு முரண்பாடுகளின் மொத்தக் கலவையாக இருப்பதால் இன்னும் பெரிய ஆயத்தின் மீளாய்வுக்கு விடும் படி நீதிமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் போராடலாம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் முரண்பாடுகளைத் தோலுரிப்பதற்கான இயக்கத்தை விரிவாக நடத்த வேண்டும். இந்தப் பரப்புரை இயக்கம் பன்னாட்டரங்கிலும் நடத்தப்பட வேண்டும். இந்தியாவின் சமயச் சார்பின்மை, குடியாட்சியம், நீதித்துறைத் தற்சார்பு ஒவ்வொன்றுமே கேள்விக்குள்ளாக்கப்படும் நிலையில் இந்திய ஆட்சியாளர்களின் நிலை ஆட்டங்காணும். இது காசுமீரச் சிக்கலுக்கும் பொருந்தும்.

காசுமீரம், பாபர் மசூதி - இராமர் கோயில் போன்ற உண்மையிலேயே எளிய சிக்கல்களுக்கு (குடியாட்சிய நோக்கில் தீர்க்க முனைந்தால் இவை எளிய சிக்கல்களே) இவ்வளவு நீண்ட காலமாகியும் இந்தியாவால் அமைதியான, இணக்கமான தீர்வு காண முடியவில்லை என்பது ஆளும்கட்சியின் தோல்வி மட்டுமன்று, நீதிமன்றத்தின் தோல்வி மட்டுமன்று. இது இந்தியா எனும் அரசியல் கட்டமைப்பின் தோல்வியாகும். தேசிய இனங்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் தலித்துகள், பழங்குடிகள் உள்ளிட்ட ஒடுக்குண்ட மக்களுக்கும் பெண்களுக்கும் இந்தியா பாதுகாப்பான கட்டமைப்பு இல்லை என்பதுதான் எழுபதாண்டுப் பட்டறிவு.

ஜாராட்சியை ஐரோப்பியப் பிற்போக்கின் அரண் என்றார் புரட்சித் தலைவர் இலெனின். இந்தியப் பேரரசு தெற்காசியப் பிற்போக்கின் அரண். குடியாட்சியப் போர்வையால் இது மேலும் வலுக்கூடியதாகிறது. மேலும் ஆபத்தானதாகிறது. நம் பணி மேலும் கடினமாகிறது.

.

உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழ் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவயமாகவே அனுப்பி வருகிறோம். கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி அனுப்பினால் உங்களுக்கும் அனுப்புவோம். புதுவை, வில்லிபுத்தூர், மதுரையில் உரிமைத்தமிழ்த்தேசம் முகப்பின் அடையாள அச்சு வெளியிடப்பட்டது, வந்திருந்த அனைவருக்கும் மின்னிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. மின்னிதழ் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அனுப்பியுதவுங்கள்

-தியாகு,ஆசிரியர்

## காசுமீரம் யாருக்கு?

**தோழர் தியாகு**

காசுமீரம் சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு நூறு நாட்களுக்கு மேலாகிறது.இன்னும் எவ்வளவு காலம் இந்தக் கொடுமை தொடரும் எனத் தெரியவில்லை. காசுமீரம் குறித்து உலகில் பெரிய எதிர்வினை ஏதுமில்லை.இந்தியாவின் மற்றப் பகுதிகளும் மௌனம் காக்கின்றன. தமிழகத்தில் மட்டும் தான் ஓரளவு எதிர்ப்புள்ளது.இங்கேயும் கூட பலரிடமும் இந்தியாவின் குரலே எதிரொலிக்கின்றன.இதற்குக் காரணம் காசுமீரம் பற்றியத் தெளிவின்மையே. தெளிவின்மையைப் போக்கும் ஒரு முயற்சியே தோழர் தியாகுவின் காசுமீரம் யாருக்கு எனும் நூல்.

(விலை உரூ.100 )

*நூல்களைப் பெற...*

தோழர் தியாகு

8939154752.

.




பட்டுக்கோட்டை

தோழர் இராமசாமி

9751072143

| மதுரை | கோவை | தேனி | பொள்ளாச்சி |
|---|---|---|---|
| கதிர்வேல் | ஞட்பன் சிவா | மதியவன் | ஆ.சத்தியபிரபு |
| 9894913820 | 9944952893. | 9600039031 | 9865995396 |

# பாபர் மசூதியா? இராமர் கோயிலா?

# உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நியாயமானதா?

தோழர்.தியாகு



அயோத்தியில் இராமர் கோயிலை இடித்து விட்டு பாபர் அந்த இடத்தில் மசூதி கட்டினாரா?

இல்லை என்கிறது உச்ச நீதிமன்றம்.

பாபர் மசூதிக்குள் 1949ஆம் ஆண்டு குழந்தை இராமர் சிலையைக் கொண்டுபோய் வைத்தது சரியா? சட்டப்படி சரியில்லை என்கிறது உச்ச நீதிமன்றம்.

1992 திசம்பர் 6ஆம் நாள் பாஜக தலைவர் அத்வானி தலைமையிலான கரசேவகர்கள் பட்டப்பகலில் பாபர் மசூதியை இடித்துத் தரை மட்டமாக்கியது சரியா? இல்லை, அது சட்டப்புறம்பான செயல் என்கிறது உச்ச நீதிமன்றம்!

சென்ற நவம்பர் 9ஆம் நாள் இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதியர் கொண்ட அரசமைப்புச் சட்ட ஆயம் பாபர் மசூதி வழக்கில் அளித்துள்ள தீர்ப்பு மேற்கண்ட உண்மைகளையெல்லாம் சொல்லி விட்டு இறுதியில் பாபர் மசூதி இடம் பெற்றிருந்த 2.77 ஏக்கர் நிலம் குழந்தை இராமருக்கே சொந்தம் என்று முடிவு செய்கிறது. அங்கு அரசே இராமர் கோயில் கட்டிக் கொடுக்க ஆணையிடுகிறது. ஏனென்றால் அது இந்துக்களின் நம்பிக்கையாம்! அப்படியானால் முசுலிம்களின் நம்பிக்கை? அவர்கள் மசூதி கட்டிக் கொள்ளத் தனியாக ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமாம்!

இது சட்டப்படியான தீர்ப்புதானா? இந்த நாடு மதச் சார்பற்ற நாடுதானா? இது நீதிமன்றமா? இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ் கட்டப் பஞ்சாயத்தா? பாபர் மசூதியை இடித்தது குற்றம் என்று சொல்லி விட்டு அந்தக் குற்றவாளிகளுக்கு ஆதரவாகவும், ஒரு குற்றமும் செய்யாத முஸ்லிம்களைத் தண்டிக்கும் வகையிலும் தீர்ப்பு வழங்க ஒரு நீதிமன்றம் தேவையா?

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் நீதி நியாயம் இல்லை என்று பல முன்னாள் நீதிபதிகளும் சட்ட அறிஞர்களும் கருத்துக் கூறியுள்ளனர்.

இந்தத் தீர்ப்பு சிறுபான்மையினரை வஞ்சித்துள்ள தீர்ப்பு மட்டுமல்ல. சமயச்

சார்பின்மையிலும் சட்டத்தின் ஆட்சியிலும் நம்பிக்கை வைத்துள்ள அனைவருக்கும் அதிர்ச்சியளித்துள்ள தீர்ப்புமாகும்.

இந்தத் தீர்ப்பைச் சட்டப்படி மீளாய்வு செய்து நீதி வழங்கக் குரல் கொடுப்போம், வாரீர்!

## நவம்பர் புரட்சி நாள் கருத்தரங்கம்



தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சென்ற நவம்பர் 7-ஆம் நாள் சென்னையில் நவம்பர் புரட்சி நாள் கருத்தரங்கம் நடத்தியது. கீழ்ப்பாக்கத்தில் உள்ள உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றம் மேயர் கிருஷ்ணமூர்த்தி இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தோழர் வே.செல்வமுருகன் தலைமை வகித்தார். தோழர் வாழ்வாங்கி சுந்தர் வரவேற்புரை ஆற்றினார். தோழர்கள் தியாகு, சமந்தா, இளந்தமிழகம் செந்தில், மதியவன் இரும்பொறை ஆகியோர் நவம்பர் புரட்சி தொடர்பான தலைப்புகளில் உரையாற்றினர். பேராசிரியர்.அர்விந்த் சுந்தர் நவம்பர் புரட்சியும், கலைகளும் என்பது பற்றி காட்சி விளக்கத்துடன் உரையாற்றினார். பேராசிரியர்.சிவக்குமார் '**காசுமீரம் யாருக்கு**' நூல்அறிமுகம் செய்தார். தோழர்.மகிழன் நன்றியுரை ஆற்றினார்.

## பொருளாதார முடக்கத்தை முடுக்கிவிடும் ஒன்றியம்

சமந்தா

பொருளாதார மந்தநிலை இன்று பேசுபொருளாக உள்ளதோடு நம் உணர்வுநிலையாகவும், முதலிய சமூகத்தில் வாழ்வதால் அதுவே நம் வாழ்நிலையாகவும் உள்ளது. பொருளாதார மந்தநிலையின் வரையறை என்ன, பொருளாதார மந்த நிலைக்கும், பொருளாதார வீழ்ச்சி (பொருளாதார பெருமந்தநிலை) ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பு, வேறுபாடு என்ன எனப் பார்த்தோமானால், நாட்டின் மொத்தப் பொருளாக்க மதிப்பின் வளர்ச்சி வீதத்தில் குறுக்கம் ஏற்பட்டு அது 2 காலாண்டுகளுக்கு மேல் தொடர்ந்தால் அது பொருளாதார மந்தநிலை எனப்படுகிறது. இந்தப் பொருளாக்கக் குறுக்கத்தினால் ஏற்படும் பொருளாதார மந்தநிலை நீண்ட கால அளவில் நீடித்து

ஆண்டுகளாகத் தொடர்ந்தால் அது பொருளாதார பெருமந்தம் எனப்படுகிறது. இதனால் அறுதித்தேவைக் குறைபாடு, வேலைவாய்ப்பின்மை மிகவும் அதிகமாகி பொருளாதார நடவடிக்கைகள்..முடங்கிப்போகின்றன.

தற்பொழுது உலகெங்கிலும் பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளது.குறிப்பாக உற்பத்தித் துறையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்நிலை பிறத் துறைகளிலும் பின் தொடரும் அபாயம் உள்ளது.பொருளாதாரத்தேக்கம் ஒட்டுமொத்த தேவையின் அளவும், முதலீட்டின் அளவும் மிகக் குறைந்துள்ளதாலும் ஏற்பட்டுள்ளது. பொருளாதார மந்தநிலையை முதலியம் பொருளியத்தின் இயல்பான ஏற்ற இறக்கங்களின் சுழற்சியில் ஒரு பகுதியாகவே பார்க்கிறது.அதற்கு அந்தக் கட்டமைப்புக்குள்ளே தீர்வு உண்டு எனவே போதிக்கிறது. ஆனால் உண்மையில் இது முதலியத்தின் அடிப்படை முரண்பாடு, உற்பத்தி சாதனங்களின் தனியுடைமையால் உழைப்பு சமூகமயமாக்கப்பட்ட போதிலும் அதன் விளைபொருளான மிகைமதிப்பை கொள்ளை லாபமாக பெருமுதலாளிகளே கைகொள்கின்றனர். மூலமுதலின் வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடுகையில் கூலியின் வளர்ச்சி வீதம் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.ஆக்கமுறைகள் வளர்ச்சியடைந்து நவீனமாக்கப்பட்டு உற்பத்தித்திறன் பெருமளவிற்கு உயர்ந்த போதிலும் கூலியுழைப்பு மிகவும் மலிவாக்கப்பட்டுள்ளது இந்தியாவிலோ பொருளாதார வளர்ச்சி வீதம் 5 சதவீதமாக சரிந்துள்ளது. அரசின் எதிர்மறையான நடவடிக்கைகளால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என உலக வங்கியே ஒப்புகொண்டுள்ளது. தெற்காசியாவில் இந்தியாவைக் காட்டிலும் வங்கதேசம், நேபாளம் பொருளாதார வளர்ச்சி அதிகமாக உள்ளதாகவும், ஜி.எஸ்.டி, பண மதிப்பிழப்பு போன்ற நடவடிக்கைகளின் விளைவால் தொழில் சேவைத் துறைகள் சரிவை சந்தித்துள்ளதாகவும், இதனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சரிந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி 2018-19 உள்நாட்டு நுகர்வு சரிவடைந்திருப்பதையும், தேவை குறைபாட்டினால் பொருளாதாரத்தில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டிய போதிலும் இது ஒரு சுழற்சி முறை சரிவு தானே தவிர ஆழமான கட்டமைப்பு ரீதியான மந்த நிலையல்ல என்று தன் ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.மக்களின் நுகர்வுத்திறன் மிகவும் குறைந்துள்ளது. மத்திய வங்கி கணக்கீட்டின் படி நுகர்வோர் நம்பிக்கை ஆறு ஆண்டுகளில்லாத அளவிற்கு குறைந்துள்ளது. குறிப்பாக கிராமப்புற உழைக்கும் மக்களின் வாங்கும் திறன் மிகவும் குறைந்துள்ளது. 40

ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலைவாய்ப்பின்மை கடுமையாக உயர்ந்துள்ளது. முதலீட்டு வீதமும்,சேமிப்புவீதமும்..மிகக்குறைந்துள்ளது.

இந்நிலையில் ஒரு மக்கள் நல அரசு என்ன செய்யவேண்டும் உழைக்கும் மக்களின் வாங்கும் திறனை அதிகப்படுத்தும் விதமாகக் கூலியை உயர்த்தவேண்டும், மக்களிடம் பணப் புழக்கத்தை அதிக்கப்படுத்தும் விதமாக சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தி சலுகைகள் வழங்க முதலீடு செய்ய வேண்டும்,உடனடி நிவாரணமாக கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்த அரசே நேரடியாக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்.இதற்கான நிதியை நேரடி செல்வ வரியின் மூலம் பெறவேண்டும்,. ஆனால் பாஜக அரசு செய்தது என்ன, அதற்கு நேர் எதிராக கடந்த சில மாதங்களில் நாட்டின் பணக்கார நிறுவனங்களுக்கு மட்டும் ரூ.2.25 லட்சம் கோடியை நிவாரணமாக வழங்கியுள்ளது. பெருநிறுவனங்களின் நிறுவனவரியை 30லிருந்து 22% குறைத்துள்ளது. புதிதாகத் துவங்கப்படும் உற்பத்தி நிறுவனங்களுக்கான நிறுவன வரி 25%லிருந்து 15% ஆகக் குறைக்கப்பட்டது. குறைந்தபட்ச மாற்றுவரியை18%லிருந்து 15%ஆகக் குறைத்துள்ளது. வரிக்குறைப்பால் 0.7% ஜி.டி.பி நிதிப் பற்றாக்குறை அதிகமாகும் அரசு கூடுதல் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்படும். இந்த வரிக் குறைப்பால் அரசிற்கு ரூ.1.45லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்படும். பங்குச்சந்தை முதலீடுகள் மூலம் ஆதாயம் அடையும் முதலீட்டாளர்கள், வெளி நாட்டு முதலீட்டாளர்களுக்கு பெரும் பணக்காரர்களுக்கானக் கூடுதல்-வரியை விலக்கியுள்ளது.இந்த வரிச்சலுகைகள் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை ஊக்கப்படுத்தும். முதலீடு பெருகும், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும்.இது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிட்டு வருவாயை உயர்த்தும் என நம்புவதாக நடைமுறைக்கு நேர்மாறாக நிதி.அமைச்சர் தெரிவித்துள்ளார். பொருட்களின் விற்பனையில் தேக்கம் ஏற்பட்டு பெருலாபத்திற்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் தனியார் முதலாளர்கள் முதலீடு செய்ய முன்வரவே மாட்டார்கள். இந்நிலையில் தனியார் முதலீட்டை அதிகப்படுத்துவதற்காக எனக்கூறி பெரு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அவர்களது செல்வத்தையும் தனிச்சொத்தையுமே அதிகரிக்குமே ஒழிய அது புதிய முதலீடுகளை அதிகப்படுத்தப்போவதில்லை.

பெரு நிறுவனங்கள் மத்திய மற்றும் சிறு குறு நிறுவனங்களுக்கு 40000 கோடியை கொடுக்காமல் நிலுவையில் வைத்துள்ளது.இந்த வருடம் மத்திய சிறு குறு நிறுவனங்களுக்கான கடன் வளர்ச்சி வீதம் 3.85% குறைந்துள்ளது. மத்திய வங்கி வங்கிவீதத்தைக் குறைத்த பின்பும், அதன் பயனைப்

மக்கள் பெறும் நிலையில் வங்கிகள் செயல்படவில்லை.லோன் மேளாக்களின் மூலமும் குறைந்த அளவுக் கடனே வி நியோகம் ஆகியுள்ளது. கடன் மலிவுக் கொள்கையை மட்டுமே முதலியம் சர்வரோக-நிவாரணியாகக்..காண்கிறது.

அரசு தரும் தீர்வுகளில் அரசு நேரடியாக முதலீடு செய்வது குறித்தோ, பொருளா தார நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுவது குறித்தோ பெயரளவிற்கு கூட இடமளிக்கவில்லை. இந்த பெறு நிறுவனங்களுக்கு வழங்கிய சலுகைகளுக்கான மொத்த மதிப்பை அரசு தனியாருக்கு அளிக்காமல் தானே நேரடியாக முதலீடு செய்யுமானால் அது நிச்சயமாக பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்.ஆக்கத் திட்டங்களில் முதலீடு செய்வதற்காக அரசு கடன் பெறுவது தவறில்லை. அந்த முதலீட்டால் கிடைக்கும் வருவாய் அக்கடனுக்கான வட்டிவீதத்தை விட அதிகமாக இருந்தால், அது நீடித்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும், வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் ஊக்குவிக்கும்.சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போதெல்லாம் நிதிப்பற்றாக்குறை அதிகமாகும் என செலவீனங்களை வெட்டிவிடும் அரசு, கார்ப்பரேட்டுகளுக்கு இவ்வளவு சலுகைகள் அளிக்கும் போது வரும் நிதிப்பற்றாக்குறையை மட்டும் கண்டுகொள்ளவே இல்லை. அது குறித்து கேட்டால் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும் போது பார்த்துக் கொள்ளலாம் எனப் பெருந்தன்மையுடன் பதிலளிக்கிறார் நிதியமைச்சர். பொருளாதார நெருக்கடிகளின் போதும் கூட பெரும்பணக்காரர்களே இது போல் கொள்ளை லாபம் ஈட்ட குடியாட்சியத்துக்கு விரோதமாகஅரசே துணைபோகிறது. பாதிக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கோ எந்த நிவாரணமும் இல்லை.இதனால் அறுதித்தேவையும், நுகர்வும் மேலும் குறைந்து பொருளாதார நெருக்கடி மேலும் முடுக்கிவிடப்பட்டு நிலைமை சரி செய்ய இயலாத அளவிற்கு மேலும் முடங்கிப்போகும்.ஏற்கெனவே பெறுநிறுவனங்கள் 2% சமூகப் பொறுப்பு நிதியை சரியாக ஒதுக்கீடு செய்யாமலும், செயல்படுத்தாமலும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடும் நிலையில், அதன் வெளிப்படைத் தன்மையை மேலும் குறைத்து அதன் முறைகேடுகளை ஊக்குவிக்கும் விதமாகத் தற்பொழுது சமூகப் பொறுப்பு நிதியை ஐ.ஐ.டி மற்றும் என்.ஐ.டியில் ஆய்வுக்காக செயல்படுத்தலாம் என்றக் கூடுதல்சலுகையை மத்தியஅரசு அறிவித்துள்ளது.ஜன்தன் கணக்குகளை உருவாக்கும் போது பாஜக அரசு என்ன கூறியது? நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வங்கிக் கணக்கை, வங்கி சேவையை பெறும் விதம் செய்யப் போகிறோம் என்றது, அது எந்த அளவுக்கு நடைமுறையாகியது என்பது தனிக்கதை, தற்போது வங்கிச் சேவைகளை பொது மக்களுக்குக் குறைக்கும் வண்ணம், நாடு முழுவதும் 27 பொதுத்துறை வங்கிகள் இருந்த நிலையில் வங்கிகளை

இணைத்து 12வங்கிகளாகக் குறைக்கஉள்ளனர். பொதுத்துறை வங்கிகள் இணைக்கப்படும் நடவடிக்கை 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான படிக்கற்கள் என்று நிதித்துறை செயலர் ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார், எப்பேர்பட்ட படிக்கட்டுகள் அவை விவசாயிகளின், பாட்டாளிகளின் முதுகில் கட்டப்பட்டப் படிக்கட்டுகள். அவை. இந்தியாவின் ஒரு கை ஜிடிபி மாய்மாலத்தையும், மற்றொரு கை பங்குச்சந்தை மாய்மாலத்தையும் பிடித்துத் தொங்கிக் கொண்டுள்ளது. இதன்படி ஜிடிபியும் உயர்ந்து பங்குச்சந்தையும் உயர்ந்தால் பொருளாதாரம் சிறப்பாக உள்ளதாகப் போற்றப்படும். அந்த ஜிடிபியில் எத்தனை சதவீதம் தொழிலாளர்களுக்கு சென்றது, எவ்வளவு சதவீதம் சிறு,குறு விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் சென்றது என்பதைப் பற்றி ஏன் நிதியமைச்சகம் கவலைப்படவேண்டும். பெருமுதலாளிகள் சந்தையில் பெருலாபம் பெற வழிவகை செய்யவேண்டும் என்பதே அதன் ஒரே நிதிக்கொள்கை.இன்றைய வளர்ச்சி வீதத்தில் இந்தியா முடங்கிக் கிடந்தால் 2024க்குள் 5டிரில்லியன் பொருளாதாரமாவது எப்படி சாத்தியமாகும்.பெறு நிறுவனங்களுக்கான சலுகைகளால் பங்குச்சந்தை ஏற்றம் பெற்றிருக்கிறது, முதலீட்டளவில் உள்ள தேக்கத்தை வெளி நாட்டு நிதி மூலதனத்தின் மூலமே சரி செய்ய முடியும் என்று நம்பவைக்கப்படுகிறது.சீனாவிலிருந்து வெளியேறும் முதலீடுகளை இந்தியாவிற்குள் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்வதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். இந்தியா 5டிரில்லியன் பொருளாதாரமாகுவதாலோ,வெளி நாட்டு முதலீடுகளை ஈர்த்து பங்குச்சந்தையில் ஏற்றம் பெறுவதால் மட்டும் இங்குள்ள வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கவோ, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை மட்டுப்படுத்தவோ முடியாது. முதலியத்தின் அடிப்படைக் கட்டமைப்பினால் ஏற்பட்டதே இன்றைய நெருக்கடி. இந்தக் கட்டமைப்பைத் தகர்த்துத் தான் இந்நெருக்கடிகளுக்கு முற்றுப்புள்ளி..வைக்கமுடியும்.

**அடிமை நிலையில் மாநிலங்கள்:**

தற்போது 15வது நிதிக்குழு செயல்படுத்த இருக்கும் விதிமுறைகள் கூட்டாட்சிக் கூட்டுறவிற்கு முற்றிலும் புறம்பானதாக உள்ளது.இதன்படி மொத்த வரிவருவாயில் மாநிலங்களுக்கு 42% ஒதுக்குவதற்கு முன்பே நாட்டின் வெளி நாட்டு, உள்நாட்டு பாதுகாப்புக்காக ஒரு நிரந்தர நிதியை உருவாக்க வேண்டும் . இது ஏற்கெனவே 14வது நிதிக்குழுவால் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட 42% வரிவருவாயை மேலும் குறைக்கும் நடவடிக்கையாகும்.14 வது நிதிக்குழு மொத்த வரிவருவாயில் மாநிலங்களுக்கு 42% ஒதுக்கீடு செய்யுமாறு பரிந்துரைத்திருந்தது இது 13வது நிதிக்குழு திட்டம் சாரா

தேவைகளுக்கென ஒதுக்கிய 32% ஐக் காட்டிலும் 10% அதிகமாகத் தெரிந்தாலும் உயர்த்தப்பட்டது என்னவோ 3% தான். எப்படி எனப் பார்த்தோமானால், திட்டக்குழு திட்டம் சார்ந்த செலவீனங்களுக்காக மத்திய அரசின் ஒட்டுமொத்த வருவாயில் 5.5% ஒதுக்கிவந்தது. பாஜக அரசால் திட்டக்குழு மூடப்பட்டதால் அது நிதிக்குழு ஒதுக்கீடு களுடன் சேர்க்கப்பட்டது.மேலும் துறைவாரியாக அளித்து வந்த நிதி உதவிகள் 1.5-2%. இவை அனைத்தையும் மொத்தமாக சேர்த்தால் 32+5.5+1.5=39%. மத்திய அரசு மாநிலங்களுக்குப் பங்கில்லாத கூடுதல் வரி, செஸ் மூலமாக வரி வருவாயை அதிக அளவிற்கு மையப்படுத்தியுள்ளதால் மாநிலங்கள் மொத்த வரி வருவாயில் 32 சதவீதத்திற்கும் குறைவாகவே பெறும் நிலை உள்ளது.

மேலும் 14வது நிதிக்குழுவின் காலம் நிறைவு பெறுவதற்கு முன்பே அவசரகதியில் ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்பட்டதால் 14வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் சரியாக நிறைவேற்றப்படவில்லை. ஜி.எஸ்.டி என்பது உற்பத்தி அடிப்படையிலான வரி விதிப்பு முறைஅல்ல.நுகர்வு, இலக்கு அடிப்படையிலான வரிவிதிப்பு முறை.இதன் படி தமிழ் நாட்டில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டாலும், அது கோவாவில் நுகரப்பட்டால் அப்பொருளுக்கான வரிவருவாய் கோவாவிற்கே கிடைக்குமே தவிர தமிழ் நாட்டிற்குக் கிடைக்காது.இவ்வரி முறையால் உற்பத்தியில் அதிகப் பங்கேற்கும் தமிழ்நாடு உரிய நிதி வருவாய், முறையாக இழப்பீட்டுத் தொகையையும் கொடுக்கப்படாததாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.ஜி.எஸ்.டி நிவாரணத்தொகை 2022 வரை மட்டுமே வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அதற்கு மாநிலங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் இழப்பீட்டுத் தொகை கணக்கீடு செய்ய அடிப்படியான வளர்ச்சிவீதத்தை 14% லிருந்து குறைக்கப்போவதாக அறிவித்துள்ளதால், இழப்பீட்டுத் தொகை குறையும் அபாயமும் உள்ளது. ஜி.எஸ்.டி வரியால் ஏற்கெனவே மாநிலங்கள் வரி உரிமையை இழந்து நிதிச்சுமையால் நசுக்கப்பட்ட நிலையில், மாநிலங்களின் நிதி வருவாயை மேலும் குறைக்கும் விதமான இந்திய ஒன்றியத்தின் நடவடிக்கை ஜன நாயகத்திற்கு முற்றிலும் புறம்பானது. ஜி.எஸ்.டியில் சில குறைபாடுகள் இருக்கலாம் ஆனால் அது தான் சட்டம் என்கிறார் நிதியமைச்சர்.அது யாருக்கான சட்டம் என்பது தான் கேள்வி. மூலமுதலில் கார்ல்மார்க்ஸ் முதலியத்தைத் தோலுரித்துக் காட்டும் போது, அதன் வளர்ச்சியின் தன்மைகளாக மூலதனக் குவிப்பையும், மையப்படுத்துதலையும் விளக்குவார்,இந்தியாவில் ஜிஎஸ்டி வரி என்பது சிறு உற்பத்தியாளர்களை, சிறுவணிகர்களை விழுங்கி மூலமுதலின் குவிப்பை, மையப்படுத்துதலை முதலாளர்களே நேரடியாக செய்ய அவசியமின்றி அவர்களுக்கு ஏதுவாக அரசே அந்தப் பணியை எளிதாக செய்யும் விதமானக் கருவியாகியது. படுமோசமான அயல்நாட்டுக் கொள்கை கொண்ட

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசு கூட தன் நாடுகளின் மீது இப்படிப்பட்ட வன்முறையைத் திணிக்கவில்லை.ஜி.எஸ்.டி நடைமுறையிலிருக்கும் நாடுகளிலும் இவ்வளவு அவசரமாகவும் அதிதீவிரமாகவும் ஜிஎஸ்டி செயல்படுத்தப்படவில்லை. அதேப் போல் பணமதிப்பிழப்பு கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காகவே கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக்கியது அனைவரும் அறிந்ததே. இந்திய அரசின் பணமதிப்பிழப்பும் மின்னணுப் பரிவர்த்தனையில் ஈடுபடும் முதலாளர்களுக்கு சாதகமாக, பணப் பரிவர்த்தனையில் ஈடுபடும் சிறு உற்பத்தியாளர்களை, வணிகர்களை விழுங்கி மையப்படுத்துதலை ஊக்குவிக்கும் ஒரு முதலியக் கருவியாகவே செயல்பட்டது. இந்திய ஒன்றியத்தின் அதிகாரப் பகிர்மானம் மூன்று பட்டியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல். இதுவும் வெறும் பெயரளவிற்கான ஒரு ஏற்பாடாகவே அப்பட்டமாக மாற்றப்பட்டுள்ளது. மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளையும் மத்திய அரசே ஆக்கிரமிக்கிறது. முதலில் மத்திய நிதியுதவித் திட்டங்களுக்கான (CSS) மாநிலப் பங்களிப்பு 10-25%ஆக இருந்தது பிறகு அதை 40% உயர்த்தியது.மேலும் 14வது நிதிக்குழு மாநிலங்களின் வரி வருவாய் பங்கை 42% உயர்த்தியுள்ளது எனக் காரணம் காட்டி பல மத்திய நிதியுதவித் திட்டங்களை நிறுத்தியுள்ளது. மாநிலங்களின் வருவாய் பற்றாக்குறைக்கு நிதி அளித்தல் இதுவரை இருந்த நிதிக் குழுவின் வழிமுறையாக இருந்தது. அதை 15வது நிதிக்குழு நீக்குவது நிதிக்குழுவின் நடைமுறையையே மாற்றுவதற்கு ஒப்பாகும்.

மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை பொதுப்பட்டியலில் மாற்றியதற்காகக் கல்விக்கு மத்திய அரசு கூடுதலாக நிதி ஏதும் ஒதுக்கவில்லை என்பதோடு ஏற்கெனவே ஒதுக்கிவந்த நிதியையும் வெட்டியுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தின் படி மத்திய அரசு பெறும் வரிவருவாயிலே மத்தியப் பட்டியலில் உள்ளத் துறைகளுக்கான செலவீனங்களை செய்யவேண்டும். பாதுகாப்புத் துறை மத்திய பட்டியலில் உள்ள நிலையில் அதற்கான நிதியை மாநிலங்களின் நிதிப்பங்கிலிருந்துப் பறிப்பது அரசியலமைப்பு சட்டத்திற்கே புறம்பானது. அனைத்துத் துறைகளுக்கான அதிகாரங்களையும் மையப்படுத்தி, நிதிப் பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதோடு மட்டுமில்லாமல் மாநிலங்களின் நிதியையும் பறித்து அவற்றை மேலும் கடனாளியாக்கி அடிமைப்படுத்துவது தான் இந்திய ஒன்றியம் கூறும் கூட்டுறவுக் கூட்டாட்சியத்தின் ஜனநாயகமா?.

## தோழர் பெ.மணியரசனுக்கு மறுமொழி (6)

# நேர்வகைத் தமிழ்த் தேசியமும் எதிர்வகை இந்தியத் தேசியமும்

**தியாகு**

இந்தியத் தேசியம் என்ற ஒன்று உண்டா? இல்லையா? உண்டு, அது எதிர்வகைத் தேசியம் என்பது என் விடை. இந்தியத் தேசியம் என்பது பொய் என்கிறார் பெ.ம. ஆகவே இந்தியத் தேசியம் எதிர்வகைத் தேசியமா? பொய்த் தேசியமா? என்பதாகக் கேள்வி சுருங்கி விடுகிறது.

பெ.ம. சொல்கிறார்:

"வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பில் பொதுப் பகைவனுக்கு எதிராகப் பீறிட்டுக் கிளம்பிய மக்களின் ஒன்றுபட்ட உணர்ச்சியில் தந்திரமாக இந்து மத ஆரிய தேச உனர்ச்சிகளைத் திணித்து, இந்தியத் தேசியம் என்ற புனைவுக் கருத்தியலைத் தங்கள் நலனுக்காக ஆரியப் பார்ப்பனிய - முதலாளிய ஆற்றல்கள் உருவாக்கின. அவ்வாறான இந்துத்துவா புனைவு தேசியத்தைத்தான் தோழர் தியாகு எதிர்வகை இந்தியத்தேசியம் என்று ஞாயப்படுத்துகிறார்...."

"வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பில் பொதுப் பகைவனுக்கு எதிராகப் பீறிட்டுக் கிளம்பிய மக்களின் ஒன்றுபட்ட உணர்ச்சி" என்கிறீர்களே? அந்த உணர்ச்சிக்கு என்ன பெயர்? தேசிய உணர்ச்சி அல்லவா? நாம் என்ற உணர்ச்சி (we feeling), உளத்துருவாக்கம் (mental makeup) - இதற்குத் தேசிய உணர்ச்சி என்று பெயரில்லையா? இந்தத் தேசிய உணர்ச்சி இந்தியத் தேசிய உணர்ச்சியே அல்லவா? நீங்கள் இதற்கு வேறு பெயர் வைத்துள்ளீர்களா? இது இயல்பாய் எழுந்த தேசியமா? அல்லது புனைவுத் தேசியமா? இந்த உணர்ச்சியை உண்மை என்று ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா? இது பொய்யுணர்ச்சி என்று உங்களால் சொல்ல முடியுமா? மக்களிடையே தன்னெழுச்சியாக எழுந்த இந்தத் தேசியம் மெய்யானதல்லவா?

இந்த உணர்ச்சியை "ஆரியப் பர்ப்பனிய - முதலாளிய ஆற்றல்கள்" தவறாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதாலேயே இந்தத் தேசியம் பொய்யாகி விடுமா? இல்லாத ஒன்றாகி விடுமா? தேசியம் என்பது அனைத்துக்கும் முன்னதாக ஓர் உணர்ச்சி, நாம் எனும் உணர்ச்சி, உளத்துருவாக்கம் என்பதை பெ.ம. மறந்து விடுகிறார். தேசியம் என்றாலே கருத்தியலாகவும் அரசியலாகவும் மட்டுமே பார்க்கப் பழகியுள்ளார், அதுவும் தேசத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியம் என்ற எந்திரத்தனமான புரிதல் கொண்டுள்ளார்.

"பீறிட்டுக் கிளம்பிய மக்களின் ஒன்றுபட்ட உணர்ச்சி" என்று நீங்கள் வண்ணிக்கும் இந்தியத் தேசிய உணர்ச்சியை ஆரியப் பார்ப்பனிய - முதலாளிய ஆற்றல்கள் மட்டும்தான் பயன்படுத்திக்

கொண்டார்களா? ராஜாராம் மோகன் ராய், பிபின் சந்திர பால், ஈஸ்வர சந்திர வித்யாசாகர் போன்றவர்களை இந்தியத் தேசியத்தின் கருத்தியல் முன்னோடிகள் என்று 'இன்றைய இந்தியா'வில் ரஜ்னி பாமி தத் குணங்குறிக்கிறார். இந்த மூவரும் யார்? இவர்களின் குமுகச் சீர்திருத்த முழக்கங்களை ஆரியப் பார்ப்பனியக் கருத்தியல் என்று உங்களால் சொல்ல முடியுமா? சந்திரசேகர ஆசாத், பகத் சிங் போன்றோரின் இந்தியத் தேசியக் கருத்தியலும் ஆரியப் பார்ப்பனியம்தானா?

"பல்வேறு தேசிய இனங்கள் ஒருங்கிணைந்து போராடினால் அது எதிர்வகைத் தேசியம் ஆகும் என்று யாருமே சொல்லவில்லை" என்கிறார் பெ.ம. வேறு யாரும் சொன்னார்களா இல்லையா என்பதன்று வினா. நான் சரியான பொருளில் சொல்கிறேனா இல்லையா? என்றுதான் ஆராய வேண்டும். இதற்கு முதலில் எதிர்வகை (negative) என்ற உரிச்சொல்லின் பொருளை உன்னிப்பாகக் கருதிப் பார்க்க வேண்டும்.

Negative என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் எதிர்மறை என்கிறோம். இதற்கு எதிர்ச்சொல்லாகிய Positive நேர்நிறை எனப்படும். Negatve x Positive, எதிர்மறை x நேர்நிறை. நேர் மின்சாரம் x எதிர் மின்சாரம் - போன்ற பல எடுத்துக்காட்டுகள் இயற்கை அறிவியலில் உண்டு. மருத்துவத் துறையில் நோகாண் ஆய்வில் நோய் இல்லை என்றால் negative result (இல்லை என்ற முடிவு) என்கிறோம். நோய் இருந்தால் positive result (உண்டு என்ற முடிவு) என்கிறோம்.

எதிர்மறை x நேர்நிறை என்பதைத்தான் சற்று இலகுவாக்கி எதிர்வகை x நேர்வகை என்று அரசியல் இலக்கியத்தில் ஆள்கிறோம்.

எதிர்மறை அல்லது எதிர்வகை (negative) x நேர்நிறை அல்லது நேர்வகை (positiuve) எவ்வாறு குமுக-அரசியல் இலக்கியத்தில் ஆளப்படுகிறது என்பது தோழர் பெ.ம.வுக்குத் தெரியாமலிருக்க முடியாது என நம்புகிறோம். ஒவ்வொன்றும் ஒவ்வொருவரும் பல குணங்களின் கலவையாக இருப்பதால் நல்ல குணங்களின் தொகுப்பை நேர்நிறை என்றும், கெட்ட குணங்களின் தொகுப்பை எதிர்மறை என்றும் பிரித்துப் பார்க்கிறோம். சுருக்கமாக நேர்க்கூறு, எதிர்க்கூறு என்று பிரித்துப் பார்க்கலாம்.

ஒரு கொள்கையின் நல்ல பக்கத்தை positive side என்றும் கெட்ட பக்கத்தை negative side என்றும் சொல்வதுண்டு அல்லவா? நம் ஆய்பொருளையே நெருங்கி வருவதானால், தேசியங்களில் நல்ல தேசியங்களும் கெட்ட தேசியங்களும் உண்டு. முன்னேற்றத்துக்கு உதவக்கூடியது, நீதியின் பாற்பட்டது நல்ல தேசியம். இது positive nationalism. நேர்நிறைத் தேசியம், சுருக்கமாக நேர்த் தேசியம். மாறாக முன்னேற்றத்துக்கு எதிரானது, அநீதியின் பாற்பட்டது கெட்ட தேசியம். இது

negative nationalism. எதிர்மறைத் தேசியம், சுருக்கமாக எதிர்த் தேசியம்.

நேர்த் தேசியமும் எதிர்த் தேசியமும் வரலாற்றுவழிப்பட்டது. தேசியம் என்பதே வரலாற்று வழிப்பட்டதுதான். (All nationalism is historical). தேசியம் என்பது வரலாற்று நோக்கில் நிலையானதன்று, அசைவற்றதன்று. அது பாய்ந்தோடும் ஆறு, குத்துக்கல்லன்று. நேர் எதிராகலாம், எதிர் நேராகலாம்.

ஜார்ஜ் ஆர்வெல் 'தேசியத்தின் ஆபத்துகள்' பற்றி எழுதினார் சயோனிசத்தை negative natiuonalism (எதிர்த் தேசியம்) என்றே குணங்குறித்தார். சிங்களத் தேசியம் என்பதன் உள்ளடக்கம் வரலாற்றின் இந்தக் கட்டத்தில் சிங்கள பௌத்தப் பேரினவாதமே. சிங்களப் பேரினவாதத்தின் நிகர்ச் சொல்லாகவே சிங்களத் தேசியம் பயன்படுவதில் வியப்பில்லை. அது மொத்தத்தில் எதிர்த் தேசியமே. மாறாக ஈழத் தமிழ்த் தேசியம் என்பது முன்னேற்றத்துக்கும் விடுதலைக்குமான முற்போக்குத் தேசியமாகும். அது மொத்தத்தில் நேர்த் தேசியமாகத் திகழ்கிறது.

நம் காலத்தில் டொனால்டு டிரம்பின் கொள்கைகளை negative nationalism எதிர்த் தேசியம் என்று சில ஊடகர்கள் கண்டிப்பதுண்டு. நரேந்திர மோதியின் கொள்கைகளும் கூட இதே பெயரால் அழைக்கப்படுவதுண்டு. இந்த எதிர்த் தேசியத்தின் பார்வையில்தான் நாம் தேசப் பகைவர்களாக (anti-nationals) வசை கூறப்படுகிறோம்.

இந்தியத் தேசியமும் மொத்தத்தில் நேர்த் தேசியமாக இருந்துதான் எதிர்த் தேசியமாயிற்று. மொத்தத்தில் என்று சொல்வது ஏனென்றால் அப்போதே பல எதிர்க்கூறுகளையும் கருக்கொண்டிருந்தது. அதே போல் எதிர்த் தேசியத்திலும் பல நேர்க்கூறுகள் இருக்கலாம். எல்லாத் தேசியங்களும் சார்பியல் தன்மை கொண்டவைதாம். எதுவும் அறுதியானதன்று. (All nationalism is relative, nothing is absolute.) எங்கேயும் எப்போதும் காதல் என்பது போல் எங்கேயும் எப்போதும் தேசியம் என்பது அறிவியல் வகைப்பட்டதன்று. இது தமிழ்த் தேசியத்துக்கும் பொருந்தும்.

இதுதான் மார்க்சிய நோக்கில் தேசியம். பெ.ம. நோக்கு வேறா? என்று அறிய விரும்புகிறேன். அவர் தமிழ்த் தேசியத்தை மட்டும் எந்தக் குமுக அறிவியலுக்கும் அடங்காத, வரலாற்று வழிப்படாத அறுதித் தேசியமாகக் கருதிக் கொண்டால் நாம் பொறுப்பாக மாட்டோம்.

ஆனால் நான் இந்தியத் தேசியத்தை எதிர்வகைத் தேசியம் என்பது மேற்சொன்ன பொருளில் அன்று. Negative x positive என்ற சொல்லாட்சிக்கு வேறொரு பொருட்சாயலும் உண்டு. ஒருவர் அலல்து ஒன்று கடைப்பிடிக்கக் கூடாத எடுத்துக்காட்டாகக் கருதப்படும் போது negative example

என்கிறோம். எடுத்துக்காட்டானவர் என்றால் அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று பொருள். வேறொருவர் என்ன செய்கிறாரோ அதைச் செய்யாமலிருப்பதுதான் நல்லது என்றால் அவர் எதிர்வகை எடுத்துக்காட்டு எனப்படுவார்.

தோழர் மா சே-துங் எதிர்ப்புரட்சித் தலைவர் சியாங் கே-ஷேக்கை எதிர்வகை ஆசிரியன் (negative teacher) என்று குறிப்பிட்டார். எதெல்லாம் கூடாது என்பதை அவரிடமிருந்து கற்கலாம் என்று பொருள். கணக்கு ஆசிரியர், தமிழ் ஆசிரியர் எனப்து போல் எதிர்வகை ஆசிரியர் என்று ஒரு வகை உண்டா? அப்படி யாராவது சொல்லியிருக்கிறார்களா? என்று தோழர் பெ.ம. கேட்கக் கூடாது.

தேசியம் என்பதற்குரிய பொதுவான அடிப்படைகள் இருக்கும் போது அது நேர்நிறைத் தேசியம், நேர்வகைத் தேசியம், சுருக்கமாக நேர்த் தேசியம் (poisitive natuionalism) ஆகிறது. இந்த அடிப்படைகள் இல்லாமல் வரலாற்றுக் காரணிகளால் ஒரு தேசியம் எழும் போது, அது எதிர்மறைத் தேசியம், எதிர்வகைத் தேசியம், சுருக்கமாக எதிர்த் தேசியம் (negative nationalism) ஆகிறது.

இந்த வரலாற்றுக் கட்டத்தில் இந்தியத் தேசியம் எதிர்வகைத் தேசியமாகவும், தமிழ்த் தேசியம் நேர்வகைத் தேசியமாகவும் உள்ளன. (தொடரும்)

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்... (1)

சமந்தா




சமூகப் பொருளாதார ஆய்வுக்கான சங்கமும் (Society for Social and Economic Research (SSER), அறிவுப் பொதுமை (Knowledge Commons) அமைப்பும் ஒருங்கிணைந்து, சமூக-ஆர்வலர்கள், ஆய்வு-மாணவர்கள்,போராளிகள், தொழிற்சங்கப்போராளிகள் ஆகியோருக்கு மார்க்சியத்தைப் பயிற்றுவிக்கவும், இடதுசாரி இயக்கங்களை வலுப்படுத்தவும் ஒரு பயிற்சிப் பட்டறையாக முதல் நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியை ஹிமாச்சல் பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தில் நக்வெய்னில் தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பின்(STD) வளாகத்தில் ஒழுங்கு செய்திருந்தது. அதன் முதல் தொகுதி மாணவர்களுக்கான பயிற்சி செப்டம்பர் 20

முதல் அக்டோபர் 4 வரை எழுச்சியுடன் இனிதே நிறைவுபெற்றது.

(தொழில்நுட்பம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பில் (STD) சிறு விவசாயிகள், சிறு உற்பத்தியாளர்களுக்கு வருவாய் பெற்றுத் தரும் விதமாக விவசாயப் பொருட்கள், பழங்களிலிருந்து மதிப்புக் கூட்டும் தொழில் நுட்பங்களுடன் பழச்சாறு, பழக்கூழ், ஊறுகாய் போன்ற பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.)

அப்பள்ளியில் தமிழ் நாட்டிலிருந்து மூவர், கேரளாவிலிருந்து இருவர், ஆந்திராவிலிருந்து இருவர் தெலங்கனாவிலிருந்து பத்து பேர், ஒடிஸாவிலிருந்து இருவர், ராஜஸ்தானிலிருந்து ஒருவர், உத்தரப் பிரதேசத்திலிருந்து நான்கு பேர், பீகாரிலிருந்து ஒருவர், பஞ்சாபிலிருந்து ஒருவர், ஹரியானாவிலிருந்து ஒருவர், ஜம்முவிலிருந்து ஒருவர் என மொத்தம் 28 பேர் பங்கேற்றோம் (9 பெண்கள், ஒரு திருநங்கை, 18 ஆண்கள்).

பொதுவாக வட இந்தியாவில் நடக்கும் நிகழ்வுகளில் வட இந்தியர்களுக்கே அதிகப் பிரதிநிதித்துவம் கிடைக்கும். ஆனால் இங்கு சற்று மாறாக, இந்தப் பயிற்சிப் பள்ளிக்கு வந்திருந்த 28 பேரில் 16 பேர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளியின் அமைப்புக் குழு கூட்டுணர்வை வளர்க்கும் விதமாக கூட்டிணைவு முறையிலமைந்த கற்றலையும், வேலைப் பிரிவினைவாத மனப்பான்மையைக் கலையுமாறு அன்றாட வேலைகளில் அனைவரின் பங்கேற்பையும் ஊக்குவித்தது. வகுப்பில் கலந்துரையாடல், கூட்டுக்குழுக்களாகக் கற்றல், வேலை செய்தல் களப்பயணம், கலை வடிவங்களை ஊக்குவித்தல் எனப் பள்ளி பல்வேறு பயிற்று முறைகளைக் கையாண்டது.

பள்ளியின் அமைப்புக்குழுவால் நாங்கள் வேலைப் படைகளாகவும்(Brigades), கூட்டுக்குழுக்களாகவும்(Collectives) பிரித்தமைக்கப்பட்டோம். வேலைகளில் உயர்வு, தாழ்வு பிரிவினையைப் போக்கி, எல்லா வேலைகளையும், எல்லோரும் செய்ய வேண்டும் என்றக் கூட்டுணர்வு பெறும் வகையில் நாங்கள் 5 வேலைப் படைகளாக பிரித்தமைக்கப்பட்டோம். வளாகங்களைத் துப்புரவாக்கல், சாப்பிட்டப் பாத்திரங்களைக் கழுவுதல், கழிப்பிடங்களை சுத்தம் செய்தல், துணிகளைச் சலவை செய்தல், தரவுகளை ஆவணமாக்கல் ஆகிய வேலைகள் வேலைப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தப் பள்ளி எவ்வாறு மற்றப் பள்ளிகளிலிருந்து வேறுபடுகிறது, என்று பார்த்தோமானால், மாணவர்களே பள்ளியின் எல்லா நிகழ்வையும் ஒருங்கிணைத்தார்கள். மாணவர்களே இந்தப் பள்ளியை நடத்தினார்கள், அனைவரும் உழைப்பில் பங்கேற்றனர். பல்வேறுபட்ட பின்புலத்திலிருந்து வந்த மாணவர்கள் கூட்டுக்குழுக்களாகச் செயல்பட்ட போது கருத்து

வேறுபாடுகளை எவ்வாறு கையாள்வது, அவற்றைப் புரிந்துணர்ந்து பொது இசைவுடன் ஒருமித்தக் கருத்து பெறவும் பொது இலக்கிற்காக எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற புரிதலையும், அனுபவத்தையும் பெற்றோம். கூட்டுக்குழுக்களின் மூலம் கற்றல், கலந்துரையாடல், பகிர்ந்து வேலை செய்தல் என அனைத்துமே ஒரு திறந்த அணுகுமுறையையும், திறந்த மனப்பான்மையையும் கூட்டுணர்வையும், பொதுவுணர்வையும் எங்களுக்கு ஊட்டியது.

இரண்டாம் நாள் தொடக்கம் காலை ஒன்றுகூடலிலிருந்து அன்றைய நிகழ்வுகளான ஆசிரியர்களை அறிமுகம் செய்தல், வகுப்பிற்கு நேரந்தவறாமல் அனைவரின் வருகையயும், பங்கேற்பையும் உறுதிசெய்தல், வேலைப்படைகளை, ஒருங்கிணைத்தல் என அனைத்தையும் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு நாளும் ஒரு கூட்டுக்குழுவுக்கு என்று சுழற்சி முறையில் அமைப்புக் குழுவால் ஒப்படைக்கப்பட்டது.

அமைப்புக்குழுவின் வேண்டுகோளின் படி கூட்டுக்குழுக்கள் தங்களுக்குப் பெயரிட்டுக் கொண்டு, தங்கள் முழக்கங்களைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் கூட்டுக் குழுவின் பெயர்:சகாக்கள்.

முழக்கம்: ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக!

இரண்டாம் கூட்டுக்குழுவின் பெயர்: அவதார் சிங்க் பாஷ் (நக்சல்பாரி கவிஞர்).

முழக்கம்: மாட்டுத்தோலை நீயே உரி, விவசாயம் செய்ய என் நிலத்தைக் கொடு!

மூன்றாம் கூட்டுக்குழுவின் பெயர்: துர்கா வோரா (புரட்சியாளர்).

முழக்கம்: அனைத்து அதிகாரங்களும் பாட்டாளிகளுக்கே!

நான்காம் கூட்டுக்குழுவின் பெயர்: முக்திபோத் (மார்க்சியக் கவிஞர்)

முழக்கம்: மனதின் அவநம்பிக்கை, மனத்திட்பத்தில் நம்பிக்கை

ஐந்தாம் கூட்டுக்குழுவின் பெயர்: சோவியத்

முழக்கம்: அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்கே!

அங்குள்ள ஒவ்வொரு அறையும் ஒரு புரட்சியாளரின் பெயரால் அழைக்கப்பட்டது, அறை

கதவின் வெளிப்பகுதியில் புரட்சியாளரின் படமும், அவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பும் ஒட்டப்பட்டிருந்தது.

அமைப்புக் குழுவின் அறை ரோஸா லக்ஸம்பர்க்(ஜெர்மனி) எனவும், வகுப்பறை அமித் சென்குப்தா எனவும், பெருமளவு காலை ஒன்றுகூடல்களும்,கூட்டுக்குழுக்களின் கலந்துரையாடல்களும் நிகழ்ந்த கூடம் ஃபாய்ஸ் அஹ்மத் ஃபாய்ஸ் (பாகிஸ்தான்) எனவும் பெயரிடப்பட்டிருந்தன.

பெண்கள் தங்கிய அறைகள் பகத்சிங், தாமஸ் சங்கரா (பர்கினா ஃபஸோ), சால்வேடர் அலண்டே (சிலி) எனப் பெயரிடப்பட்டிருந்தன.

ஆண்கள் தங்கிய அறைகள் கிளாரா ஸெட்கின்(ஜெர்மனி), சாவித்திரிபாய் புலே, ஸெலா சஞ்செஸ் (கியூபா) என்றும் பெயரிடப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாள் காலை ஒன்றுகூடலும் அறிவூட்டி, உணர்வூட்டி எழுச்சியடையச் செய்வதாக இருந்தது. எங்களது புரட்சிய முழக்கங்களால் நக்வெய்ன் நிறைந்தது.

வகுப்பில் மாணவர்களுக்குப் பாடங்களை உடனுக்குடன் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்புக் கருவிகள் வழங்கப்பட்டன. பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே வகுப்புகள் எடுக்கப்பட்டதால் ஹிந்தி தெரியாதவர்களுக்கு சிரமமில்லாமல் இருந்தது.

எங்கள் இரண்டு வார வகுப்புகளில் வரலாற்றுப் பொருள்முதல்வாதம், அரசியல் பொருளாதாரம், இன்றைய முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், இந்தியாவில் முதலாளித்துவம், சாதி, மதம், பாலினப் பிரிவினைவாதங்களின் வரலாறு, அறிவியல் தொழில்நுட்பம், சமூகக் கலாச்சார மேலாதிக்கம் குறித்துப் பல -பேராசான்கள் வகுப்பெடுத்தார்கள். அவற்றைச் சுருக்கமாக இங்கே காண்போம்:

முதல் வகுப்பு:ஆசிரியர்: தோழர் பிரபிர் புர்கயஸ்தா. .

அவரது விரைவுரைகளின் சுருக்கமான தொகுப்பு பின்வருமாறு:

(குறிப்பு: பொறியியலாளரான பிரபிர் 'நியூஸ் க்ளிக்' பத்திரிகையின் பதிப்பாசிரியர், டெல்லி அறிவியல் மன்றத்தின் நிறுவனர்களில் ஒருவர், இந்தியாவின் இலவய மென்பொருள் இயக்கத்தின் தலைவர் (FSMI),'அறிவு பொதுவே' அமைப்பின் தலைவர்)

**தலைப்பு: சமூகம், உற்பத்தியின் பரிணாமம்:**

மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் உழைப்பும், உற்பத்திக் கருவிகளும் மிக முக்கியப் பங்கு வகுக்கின்றன. நாம் விலங்குகளாய் இருந்த பொழுதும் எவ்வாறு, எப்பொழுது விலங்குலகிலிருந்து பிரிந்து சாதகமான பண்புகளைப் பெற்றோம்? எது பரிணாமத்தை இயக்கும்

சக்தியாக உள்ளது? என்று பார்த்தோமானால், நம்மை விலங்குகளிலிருந்து பிரிக்கும் அடிப்படையான அந்தப் பண்புகளாவன: எதிரும் புதிருமான கட்டை விரல் அமைப்பு, கருவிகளை உருவாக்கும் திறன்,

எவ்வாறு நாம் மனிதர்களாகவும், சமூகமாகவும் பரிணாம வளர்ச்சி அடைந்தோம்? எப்படி பேச்சு,மொழி, சிந்தனை உருப்பெற்று வளர்ச்சி அடைந்தது? பரிணாம வரலாற்றில், எவ்வாறு மனிதர்கள் இயற்கையை ஆக்கத்துக்காகவும், அழிவுக்காகவும் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றோம்? என்பதையும் காண்போம்.

**பரிணாமம் குறித்த கற்பிதங்கள்:**

மனிதக் குரங்கிலிருந்து மனிதன் உருவானால், அந்த மனிதக் குரங்கு என்ன ஆனது? அது ஏன் இன்னும் உள்ளது? என்று சிலர் கேட்கக் கண்டிருப்போம். ஒரு இனம் மற்றொரு இனத்தைப் பதிலீடு செய்கிறது என்பது கற்பிதம், நாம் நவீன மனிதக் குரங்குகளிலிருந்து தோன்றவில்லை, மனிதரும் மனிதக் குரங்குகளும் ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டிருந்தனர். சிம்பன்சி குரங்கு நம்முடன் 98% மரபணு ஒற்றுமை கொண்டுள்ளது.சிம்பன்சிகள் நம் முதல் பங்காளி போலானவை, எளிமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் எப்படி நாம் நம் பங்காளிகளிடமிருந்து வரவில்லையோ, நமக்கும் பங்காளிகளுக்கும் பொதுவான மூதாதையர் இருந்தார்களோ அப்படித்தான் இதையும் புரிந்து கொள்ள வேண்டும். நமது பரிணாம வளர்ச்சியானது நேரியல் மாற்றங்கள் போல் எளிதாக நடைபெறவில்லை, நாம் பரிணாமத்தின் ஒரு கிளையில் உள்ளவர்கள். பரிணாமம் தொடர்ந்தியங்கும் ஒரு வளர்ச்சி நிகழ்வு. மனிதர்களும், உலகமும் படைக்கப்பட்டதாகவும், நிலைபேறு கொண்டதாகவும் மதங்கள் போதிப்பது அறிவியலுக்கு புறம்பாகும். ஒரு பொது மூதாதையரிடமிருந்து 6.5-9.3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் கிளைத்தவைதான் சிம்பன்சியும், மனித இனமும். பரிணாமம் நமக்குத் தோன்றுவது போல் தெளிவாக இருக்கவில்லை.

நியான்டர்தால்களுக்கும், ஹோமோசேப்பியன்களுக்கும், டெனிசோவன்களுக்குமிடையே வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலகட்டத்தில் இனக்கலப்பு நடந்துள்ளது.

அண்மைக் காலத்தை நீக்கிவிட்டுப் பார்த்தோமானால் பெருமளவிலான மனிதப் பரிணாம வளர்ச்சி ஆப்பிரிக்காவிலே நடைபெற்றுள்ளது. ஒட்டுமொத்த மனித குலமும் ஆப்பிரிக்காவிலிருந்து தான் தோன்றியுள்ளது. ஹோமினிடே இனத்தின் வெவ்வேறு குழுக்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து குடியேறினர். 98% மனிதனின் பரிணாம வரலாறு ஆப்பிரிக்காவின் வரலாறாகவே உள்ளது.

ஆரம்பத்தில் மனிதத் தாய் இனம் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்ததால் மிகக் குறைந்த மரபணு வேறுபாடுகளே இருந்தன. 7 மில்லியன் மனிதர்களிடையேயான மரபணு வேறுபாடுகள் ஒரு பாபூன் குழுவுக்குள் இருப்பதை விடக் குறைவாகவே இருந்தன. அதுவே மனித இன வளர்ச்சிக்குத் தடைபோடுவதாக இருந்தது. மரபணு வேறுபாடுகளின் இயக்குசக்திகள் எவை? காலநிலையும் நோய்களுமே மரபணு மாற்றங்களை உருவாக்குகின்றன.

இயற்கையின் தேர்வு என்பது எவ்வாறு உயிரினங்கள் சூழலுடன் பொருந்துகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். எதிரமைந்த கட்டை விரல்களால் பொருட்களை இறுக்கமாகப் பிடிக்கும் தன்மை சாதகமான முக்கியப் பண்பானது. குரங்குகளால் சில எளியக் கருவிகளைப் பயன்படுத்த முடிந்தாலும் கருவிகளை மாற்றவோ, அவற்றை உருவாக்குவதற்கு முன் மனத்தில் காட்சிப்படுத்தவோ முடியாது. மனிதர்களால் மட்டுமே தாம் செய்ய இருப்பதை முன்னரே மனதில் காட்சிப் படுத்த முடியும். விலங்குகளிடமிருந்து நம்மைப் பிரிக்கும் அந்த முதல் மாற்றம் 2-3 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டது (ஹோமினிடேக்கள்).

தேனீக்களும் எறும்புகளும் கூட்டுழைப்பால் அழகியலுடன் கூடிய புற்றுகளையும், கூடுகளையும் கட்டும் திறன் பெற்றிருந்தாலும் அவற்றால் ஒரேமாதிரியாகத்தான் கட்ட முடியும், புதிதாய் அவற்றால் புனைய முடியாது.

கைகளில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து நடை நிமிர்ந்தது. அவர்களின் வாழிடத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் உயர்ந்த சவானா புல்வெளிகளில் வாழ நேரிட்ட போது, நிமிர்ந்து மேலே பார்த்து, தூரத்திலிருந்து வரும் ஆட்கொல்லிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதனால் பெருமளவிற்கு இரண்டு கால்களால் ஊன்றி நிற்பதும், நடப்பதுமான பண்பு பரிணமித்தது. உயிர் பிழைத்திருப்பதற்கு அதிகம் தாக்குபிடிக்கும் திறனும் வெகு தூரத்திற்கு ஓடும் திறனும் கைவரப் பெற்றனர்.

மனிதர்கள் அந்தக் காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் இனமாக இல்லை. பரிணாம வளர்ச்சியில் அழிவின் விளிம்புநிலையில் இருந்தனர்.

ஆதி கற்காலக் கருவியான் ஓல்டோவன் கற்கோடாரி -- 1.2-2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் - உருவாக்கினர்; அதை சேமித்து வைக்கும் பழக்கம் இல்லை, வேண்டும் பொழுது உருவாக்கித் தூக்கி எறிந்து விட்டனர். பெரிய எலும்புகளை உடைக்கவும், அவற்றிலிருந்து மஜ்ஜையை எடுக்கவும் அவை பயன்பட்டன. அச்சுலேன் கற்கோடாரி 200 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது.

மவுஸ்டேரியன் காலக் கருவிகள் -- 315 லிருந்து 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு --

உருவாக்கப்பட்டன. நுண் கற்கருவிகள் நேர்த்தியாகவும், மெருகூட்டப்பட்டும் உருவாக்கப்பட்டன.

வேட்டுவ சமூகமாக இருந்த போது உணவிற்கும், உயிர் பிழைத்திருக்கவும் செலவிட்ட உழைப்பு நேரமானது இன்றைய முதலமைச் சமூகத்தில் தொழிலாளர்கள் / நாம் செலவிடும் காலத்தோடு ஒப்பிடும் பொழுது மிகக் குறைவு.

அப்பொழுது அவர்களின் இடப்பெயர்வு இரண்டு வகைப்பட்டதாக இருந்தது: 1) குறுகிய பெயர்வு: சுற்றியுள்ள, அருகிலுள்ள இடங்களுக்கு இடம்பெயர்தல். 2) காலநிலை அடிப்படையிலான தொலைதூரப் பெயர்வு: முகாம்களாக ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு இரை தேடிப் பெயர்தல், மீண்டும் பழைய இடத்திற்குத் திரும்புதல் என்று ஒவ்வொரு வருடமும் ஒரு பயணச் சுழற்சியை மேற்கொண்டனர்.

ஆரம்ப காலக்கட்டத்தில் ஒரு குழுவிற்கு 30-50 பேர் இருந்தனர். நெருப்பு கண்டுபிடிப்பதற்கு முன் மனிதர்கள் அழிவின் விளிம்பிலே இருந்தார்கள். நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட பின் இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை முதன்முதலாகப் பெற்றனர்.

சண்டையிடுவது அல்லது தப்பிச்செல்வது என்று இருந்த ஆரம்ப கால வேட்டுவ மனிதர்களுக்குச் சிக்கலான ஒலிகளோ மொழியோ தேவைப்படவில்லை. சிந்தனை ஆற்றல், மொழியாற்றலுக்கு முன்னரே கருவி உருவாக்கும் திறன் பரிணமித்தது.

கூட்டுக் குழுக்களாக வேட்டையாடுவதையும் உழைப்பதையும் ஒருங்கிணைக்க, சிக்கலான ஒலித்தொடர்பு தேவைப்பட்டது. விலங்குகளால் 200 முதல் 500 வகையான வேறுபட்ட ஒலிகள் எழுப்ப முடியும். சிம்பன்சிகளால் 2000 வார்த்தைகள் புரிந்துகொள்ள முடியும், இரண்டு வாக்கியங்கள் பேச முடியும்.

மொழி என்பது உழைப்பை ஒருங்கிணைக்கும் பொறியமைவாக, பெருந்தொகையான மக்கள் உழைப்பிற்காக ஒருங்கிணைந்து செயல்படும் நிகழ்வில் உருவாகி பரிணமித்தது. அதன் அடிப்படையில் புதிய சொற்களை உருவாக்குவதற்கான மொழி ஆற்றல், சொற்றொடர்களைக் கட்டமைக்கும் திறன் வளர்ந்தது. அதற்கேற்பக் குரல்வளையில் மாற்றம் ஏற்பட்டது.

**ஆப்பிரிக்காவிலிருந்து மனிதர்களின் இடப்பெயர்ச்சி:**

காட்டுத் தீயின் மூலம் மனிதர்கள் நெருப்பை அறிந்தனர், நெருப்பு எளிதில் செரிக்கும் உணவு தயாரிக்கவும், பாதுகாப்பிற்கும் பயன்பட்டது, ஆனால் நெருப்பை எவ்வாறு சேமிக்க முடியும் என்று அவர்கள் அறியவில்லை, சிக்கிமுக்கிக் கற்களை உரசி, நெருப்பை உருவாக்கி, நெருப்பின்

மூலம் இயற்கையைக் கட்டுப்படுத்த அறிந்த மனிதர்கள் அதைப் பெருமளவிற்கு அழிமானத்திற்கே பயன்படுத்தினார்கள். உலகின் முதல் ஆண் 180,000 ஆண்டுகளுக்கு முன்பும் முதல் பெண் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பும் தோன்றியதாக அறியப்பட்டுள்ளது.

200 முதல் 300 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவுக்குள் மனித இனத்தின் பரவல் நடைபெற்றது.

ஆப்பிரிக்காவிற்கு வெளியேயான மனிதர்களின் ஆரம்ப இடப்பெயர்வு 120-60 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. ஆரம்ப இடப்பெயர்வு கடற்கரைப் பகுதிகளில் நடைபெற்றது, கடல்மட்டம் தாழ்வாக உள்ளதால் இடப்பெயர்ச்சி, விரைவாகவும், எளிதாகவும் நடைபெற்றது.அப்பொழுது யுரேசியாவும், ஆப்பிரிக்காவும் இணைப்பிலிருந்தது, மேற்கு ஆசியா,தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளுக்கு மனிதர்கள் இடம்பெயர்ந்தனர்.பிந்தைய இடப்பெயர்வு 30-60 ஆயிரம் ஆண்டுகளுக்குள் .யுரேசியாவிற்கும், சைனாவிற்கும் மனிதர்கள் குடியேறினர். இந்த இடப்பெயர்வு மெதுவாகவும், கடினமாகவும் நடைபெற்றது.

நியோண்டர்தால் இனமானது குளிருக்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் தன்மையை முதலில் பெற்ற மனித இனம் ஆகும்.

**புதியக் கற்காலப் புரட்சி:**

வேட்டையாடி இரை தேடும் சமூகமாக இருந்த மனிதர்கள் விவசாயம் செய்ய ஆரம்பித்த காலம் புதிய கற்காலம் என்றறியப்படுகிறது. நெருப்பு மனிதர்களின் இடப்பெயர்ச்சியை மிகப் பரவலாக்க உதவியது. இதனுடன் வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டதால் மனிதர்கள். அரை நாடோடி வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். பாதுகாப்பிற்கான படையமைப்புகளும் உருவாக்கப்பட்டது.

கடைசிப் பனிக்காலத்தின் ‘பிலையோசீன்’முடிவில் புவியின் வெப்பம் உயர ஆரம்பித்தது . பனிக்காலத்தின் முடிவில் தோன்றிய புதிய காலமான ‘ஹொலொசீனில்’ .மழை அதிகமாகி.விவசாயம் செய்ய ஏதுவான சூழலைத் தந்தது.

12,000 ஆண்டுகளுக்கு முன் முதன்முதலில் மேற்காசியாவில் நைலிலிருந்து, யூப்ரிடிஸ் டைகிரிஸ் வரை லெபனான், அனதோலியா, வட ஆப்பிரிக்கா, மெசோபடோமியா, டைகிரிஸ், யூப்ரிடிஸ் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய வளப் பிறை (Fertile Crescent) பகுதியில் விவசாயம் தோன்றியது. புதியக் கற்காலப் புரட்சி 2-3,000 ஆண்டுகள் நடைபெற்றது. 6500 ஆண்டுகளுக்கு

முன்பு தென்னிந்தியாவில் குடியேற்றம் ஏற்பட்டது.

வேளாண்மைப் புரட்சியால். மக்களடர்த்தி புதியக் கற்காலப் புரட்சியின் போது அதிகமானது. நிலவியல், தொன்மரபியல் மூலம் எவ்வாறு உலகெங்கும் விவசாயம் பரவலானது என்று ஆய்வு செய்யப்படுகிறது. வளப் பிறை நைல் பள்ளத்தாக்கிலிருந்து சிந்துவெளி பள்ளத்தாக்கு வரை ஆதி வேளாண்மை பரவி இருந்தது.

புதர்க்காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகளில் காடுகளை அழித்தே குடியேற்றம் ஏற்பட்டது, விவசாயம் செய்யப்பட்டது. ஆனால் அடர்வனங்களை அழிக்க முடியவில்லை.

மிகப்பெரும் நாகரிகங்கள் அனைத்தும் பாலைவனங்களின் விளிம்பில் ஓரளவு நீர் வளம் கொண்ட, மழை பொழியும் பகுதிகளிலேயே ஏற்பட்டுள்ளன. நீண்ட நாள் உணவுக்காகவும், உபயோகத்திற்காகவும் விதைகள் சேமிக்கப்பட்டன. எந்தப் புல்வகைகளில் தானியம் கிடைக்கிறது என்பது அறியப்பட்டது.

உணவுக்கான மாமிசத்தை வேட்டையாடிப் பெற வேண்டியதில்லை என்ற நிலை கால்நடை வளர்ப்பினால் உருவானது.

**மூலப் பயிர்கள்:**

நாம் இன்று பயன்படுத்தும் பெரும்பாலான பயிர்கள் ஆப்பிரிக்காவில் பெறப்பட்டவை. கம்பு, அரிசி ஆகியவை ஆப்பிரிக்காவில் தோன்றிய பயிர் வகைகள்.மேற்காசியாவிலிருந்து கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்புகள், ஆளி ஆகியவை பெறப்பட்டன. இந்தியாவில் இருந்த நெல்லின் உற்பத்தித் திறன் ஆரம்பத்தில் குறைவாக இருந்ததாகவும், சீன நெல்வகையுடன் கலந்த பின்பு உற்பத்தித் திறன் அதிகமானதாகவும் அறியப்படுகிறது.

மண்பாண்டக் கலை வளர்ச்சி பெற்றது.விதைகளை, உணவுப் பொருட்களை சேமிக்க மண் பாண்டங்கள் தேவைப்பட்டன. அலங்கரிக்கும் வேலைக்கும் பானைகளைப் பயன்படுத்தியுள்ளனர். திறந்த நெருப்பில் சுடப்பட்ட மண்பாண்டங்கள் 900 பாகைக்குக் குறைவான வெப்ப நிலையில் உருவாக்கப்பட்டவை, மண்பாண்டங்களைச் சூளையில் இட்டு, மேல் நோக்கிய காற்றின் மூலம் அதிக வெப்பநிலையில் 1000-1200 பாகையில் சுட்டுப் பெறப்பட்டன.

**உபரி மதிப்பும், சமமின்மையும்:**

புதியக் கற்காலத்தின் போதுதான் விவசாயத்தின் மூலம் அதிகளவில் உபரி பெறப்பட்டது. ஒரு வருடத்துக்குத் தேவையான அனைத்தையும் சேமித்து வைக்க முடிந்தது. ஒரு வருடத்துக்குத் தேவையான உணவிற்கான உபரி, அடுத்த ஆண்டு பயிரிடுவதற்கான விதைக்கான உபரி.என

உபரி இரு வகையாகப் பிரிக்கப்பட்டது. உழைப்பில் காலநிலை அறிந்து எப்பொழுது மழை வரும், நீர் உயரும் என்பன குறித்த அடிப்படை அறிவு பெறப்பட்டது. அதனால் வானவியல் முதல் அறிவியலாகப் பரிணமித்தது.

வேலைப் பிரிவினை ஏற்பட்டது.கால்நடைகளை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியிருந்தது. குடியானவச் சமூகம் நிலை பெற்றவுடன் நில உரிமையும் ஏற்பட்டது.

ஆணாதிக்கம் புதியக் கற்காலத்திலே ஆரம்பமானது. பெண்களின் சொத்துரிமை பறிக்கப்பட்டது. உபரி மதிப்பும், சமமின்மையும் வர்க்கம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன.

**இரும்பும் அரசும்:**

(இதில் ஒருப் பகுதி அறிவுப் பொதுமை(Knowledge Commons) சேர்ந்த ஆய்வாளரும், பள்ளியின் அமைப்புக் குழுவைச் சேர்ந்தவருமான ஸ்ரபனி அவர்களால் எடுக்கப்பட்டது).

உலோகங்கள் கொண்டு பெருமளவு கருவிகள் உருவாக்கப்பட்டன. உலோக ஆயுதங்கள் நகரமயமாக்கலில் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளது. முதலில் பெரிதும் பயன்படுத்தப்பட்ட உலோகமான தாமிரம் எளிதாகக் கிடைப்பதில்லை, மலிவுமல்ல, குறைந்த அளவிலே கிடைத்தது. அதனுடன் ஒப்பிடும் பொழுது இரும்பு பெருமளவில் அனைவருக்கும் கிடைக்கத்தக்கதான 'ஜனநாயக' உலோகமாகவே இருந்தது எனலாம்.

படைக் கருவிகள் தயாரிப்பதில், அரசு உருவெடுப்பதில் இரும்பு முக்கியப் பங்காற்றியுள்ளது. சமூக வரலாற்றில் இரும்பு மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இரும்புக் கலப்பைகளால் உழவை ,எளிதாக்கி விவசாயத்தைப் பரவலாக்க முடிந்தது. விவசாய உற்பத்தி பெருகியது.காடுகளை அழிக்கவும் இரும்புக் கருவிகள் பயன்பட்டன.

இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் ஏறத்தாழ ஒரே நேரத்திலே இரும்பு பயன்பாட்டிற்கு வந்தது. இரும்புப் பயன்பாட்டின் தொடக்கம் பெருங்கற்காலத்திலே நிகழ்ந்தது. பெருங்கற்காலக் கருவிகள் இரும்பால் செய்தவை.

தமிழ்நாட்டின் சங்க இலக்கியத்தில் போர்வீரர்களைப் போற்றி நடுகல் நினைவுக் கற்கள் அமைக்கும் பெருங்கற்கால மரபு இருந்துள்ளது.

புதைக்கும் இடங்களில் பல்வேறு பானைகளும், பண்டங்களும் காணப்பட்டுள்ளன. தீபகற்ப இந்தியாவில் நாக்பூர், கர்நாடகா, பல்வேறு பெருங்கற்கால இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கர்நாடகா, தமிழ்நாட்டில் மட்டும் 2000 பெருங்கற்காலப் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகாரியா இரும்பு உருக்காலைகள்:

மத்திய இந்தியாவில் அகாரியாவில் பாரம்பரியமாகவே இரும்பை உருக்கும் தொழிலை

அங்குள்ளவர்கள் செய்து வந்தனர். அகாரியாவில் பெரிய சுரங்கங்கள் இருந்தன. ராஜஸ்தானில் தாமிரமும், துத்தநாகமும் கிடைத்தன. வட இந்தியாவில் குடியிருப்புகளிலே இரும்பு உற்பத்தி நடைபெற்றதற்கான தடயங்கள் இல்லை. 'அர்த்தசாஸ்திரா'வில் தாதுக்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. கர்நாடகாவிலும் தமிழ்நாட்டிலும் இரும்புச் சூளைகள் குடியிருப்புகளுக்கு அருகிலே காணப்பட்டன. வட இந்தியாவில் மையப்படுத்தப்பட்ட இரும்பு உற்பத்தி நடைபெறவில்லை. பெருமளவு இரும்புக் கசடுகள் ஒரே இடத்திலிருந்தே கிடைக்கவில்லை. வட இந்தியாவில் உயர்ந்த தரத்தில் இரும்பு உற்பத்தி செய்யப்படவில்லை. தென்னிந்தியாவில் தான் தரமான வூட்ஸ் உலை உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது.

பெரும்பாலும் இரும்பு தயாரிக்கும் போது ஒரு முறை உருக்குவதுடன் நிறுத்தப்பட்டது. அது அதிக அசுத்தங்களைக் கொண்டிருக்கும், அதிக உறுதித் தன்மை இல்லாமல் எளிதில் உடையக் கூடியதாக இருக்கும், அதில் கார்பன் அளவை அதிகரித்தால் அதிக உறுதியும்,எளிதில் உடையாத ,வளைந்து கொடுக்கும் தன்மையும் பெறும்.தென்னிந்தியாவில் உருக்கப்பட்ட இரும்பை மீண்டும் உருக்கி மாசு நீக்கப்பட்டு கரியைக் கலந்து அடித்து, பண்படுத்தி வடிவமைக்கப்பட்டது, இப்படி உருவாக்கப்பட்ட தரமான உருக்கானது மேற்கு சிரியா, ஐரோப்பா எனப் பல்வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதே தன்மை கொண்ட உலோகத்தை உருவாக்க முடிந்தாலும் அந்த முறையைச் சரியாக அறியமுடியவில்லை, வடஇந்தியாவில் புதியக் கற்காலத்தின் வேதக் கலாச்சாரச் சின்னங்களான வண்ண சாம்பல் பாண்டப் பகுதிகள்: ரவி, சட்லெஜ், கங்கைப் பகுதி, மேற்கு உத்தரப் பிரதேசத்தில் கண்டறியப்பட்டன.

இரும்பு பெரிய அளவில் பயன்பாட்டிற்கு வந்தது பொ.ஊ.மு.(கி.மு) 400-500. கங்கைப் பகுதி காடுகளை வெட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இந்திய வரலாற்று காலக்கோடு:**

வளர்ந்த ஹரப்பா நாகரிகம்: 2500-1900 பொ.ஊ.மு

முதல் நகரமயமாக்கல்: மொஹஞ்சதரோ, ஹரப்பா

வேத மக்களின் காலம்: 1500-500 பொ.ஊ.மு (மஹாஜனபதா)

வேளாண்மை, நிலவுடைமை அரசுகள், நகரம்-600-300 பொ.கா.மு.

இரண்டாம் நகரமயமாக்கம்: மகதம்.

மத்தியப்படுத்தலிலிருந்து பரவலாக்கத்திற்கான மாற்றம் 200-300பொ.ஊ(கி.பி)

சாதிகள் நிலைப்படுத்தப்பட்டது 300-500 பொ.ஊ.

இந்திய நிலக்கிழாரியம் 6-12 நூற்றாண்டு பொ.ஊ.

மேற்கிலிருந்தும்,மத்திய ஆசியாவிலிருந்தும் தொடர்ந்து உள்ளேற்றம் நடைபெற்றது.

**வேதகாலம்: 1500-500 பொ.ஊ.மு.**

முதல் நகரமயமாக்கலுக்கும்(ஹரப்பா), இரண்டாம் நகரமயமாக்கலுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி வேதகாலம் என்றழைக்கப்படுகிறது.

பெரும்பாலும் ஆயர்குல மக்கள், தேர்களையும், குதிரைகளையும் பயன்படுத்தினர். இனக்குழுக்களிடையே அடிக்கடி மோதல் நகழ்ந்தது. நீண்ட காலத்திற்கு கால்நடைகளுக்கான சண்டை தொடர்ந்தது.உற்பத்தியில் அதிக உபரி கிடைக்கவில்லை.பழங்குடியினத் தலைவர்கள் கால்நடைகளையும், பெண்களையும் காத்தனர்.1500 பொ.ஊ.மு- 800 பொ.ஊ வெவ்வேறு குழுக்களின் வருகை ஏற்பட்டது. இனக்குழுவுக்குள்ளான மோதலைக் காட்டுவதாகத் தான் மகாபாரதம் உள்ளது.

ராணுவ ஆதிக்கமும், மேன்மக்களின் ஆதிக்கமும் இருந்தன. அறிவியலும் மதமும் பிரியாமல் பின்னிக் கிடந்தன.

வேத கால வாய் வழி மரபில் உண்மைகளை விட பிற்சேர்க்கைகளும், புனைவுகளுமே அதிகமாக அறியப்படுகின்றன.

வர்ணங்கள் பற்றி ஒருமுறை குறிப்பிடப்பட்டாலும் இருந்தும் அதில் வளைந்து கொடுக்கும் தன்மை காணப்பட்டது. தர்மா பற்றிய குறிப்புகள் இருந்தாலும், கர்மா குறித்தோ, மறுபிறப்பு குறித்தோ குறிப்பிடப்படவில்லை. பின் வேதகாலத்திலே சூத்திரர்கள் பற்றிய குறிப்பு உள்ளது. வேத மரபைச் சாராத இனக்குழுக்கள் 'தாஸ்யா' என அழைக்கப்பட்டனர்.

ராஜசுவா, அஷ்வமேதா யாகங்களின் மூலம் வளங்கள் அதிகாரவர்க்கத்தினருக்குப் பிரித்தளிக்கப் பட்டன. பெண்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்ததால் அவர்களது இனத்தின் அடர்த்தியைத் தக்கவைக்க மற்ற இனப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு தாசிக்கள் எனப்பட்டனர். கடன் திருப்பிச் செலுத்த முடியாமல் இறந்தவரின் வாரிசுகள் தாசர்கள் ஆக்கப்பட்டனர். தாசர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தாமல் ,வீட்டு வேலைகளுக்கு வைத்துக் கொண்டனர்.

கம்மக்காரர்கள் உற்பத்தியில் ஓரளவிற்கு ஈடுபடுத்தப்பட்டனர், வீட்டுவேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.அடிமைகள் பெறுமளவிற்கு விவசாயத்திற்கு பயன்படுத்தப்படவில்லை.

குடியிருப்புப் பகுதிகளில் வசிக்காதவர்கள் சண்டாளர்களாக அழைக்கப்பட்டனர். நிஷாதா வெறுப்பை குறிக்கும் சொல்லாகக் குறிப்பு பெற்றுள்ளது.தீண்டத்தகாதவர்கள் பற்றி எந்தக்

குறிப்பும் இல்லை.

தர்மசாஸ்திராவில் சாதிகள் பின்பற்றப்படாமல் இருக்கும் காலத்தைக் குறிக்கும் பொருளில் கலியுகா என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு வகையான மையப்படுத்தப்பட்ட நிலவுடைமை காணப்பட்டது. சமூக வேறுபாடுகள் காணப்பட்டன. கிரிஹபதி என அழைக்கப்பட்ட செல்வமுடைய மக்கள், நிலமுடையவர்கள், வணிகர்கள் காணப்பட்டனர்.

கிரிஹசூத்திரா, தர்மசூத்ரா பொ.கா.மு 800-300 சேர்ந்தது.

ஐந்தாம் நூற்றாண்டில் 16 மகாஜனபதாக்கள் கங்கைப் பகுதியிலும்,துணைகங்கை பகுதியிலும் காணப்பட்டனர். (ஜனபதாக்கள்:-பழங்குடி இனக்குழுவின் பாதம் அல்லது இருக்கை எனப் பொருள்படும்.

கோசலா, மகதா போன்ற வலுவான மஹாஜனாபதங்கள் தனி ராணுவம் கொண்டு விளங்கின. கோசலமும், மகதமும் ஆறுகளுக்கு அருகில், இரும்பு மற்றும் தாமிரச் சுரங்கங்களுடன் முதலில் நிலைத்து நிற்கும் ராணுவத்துடன் இருப்பதாகவும் இடம்பெற்றது. .வரி பெறும் உரிமையோடு அரசும் உருவானது.

அதே காலத்தில்தான் புத்தம், சமணம், ஆசிவகம் போன்ற பகுத்தறிவின் அடிப்படையிலான வேறுபட்ட சித்தாந்தக் கொள்கைகளும், மதங்களும் உருவாயின. பெருவாரியான மருத்துவமுறைகள் புத்த மரபைச் சேர்ந்தவர்களால் முறையாக்கப்பட்டது. புத்த, சமண சமயங்களில் சாதி கர்மா குறிப்பிடப்படவில்லை, ஆனால் மறுபிறப்பு, குறிப்பிடப்பட்டிருந்தது, மூலவேத உரைகளில் மறுபிறப்பு பற்றிய குறிப்பு இல்லை.புத்தர் சமூக அமைப்பை எதிர்த்துப் போராடவில்லை, உற்பத்தியில் ஈடுபடவில்லை, மூலவுரைகள் சமூகத்தில் அரசின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கேள்வி எழுப்பவில்லை.

புத்தத்தின் எண்வழிப்பாதை தாசர்கள் வாழ்வைத் துறந்து சங்கத்தில் சேர வாய்ப்பில்லாமல் இருந்தது. ஜாதக உரைகளுக்கு முந்தைய நிர்கயா உரைகள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் விதமாக உள்ளது, வறுமையைக் குறிக்கும் தருத்ரா, துக்கா ஆகியவை நிர்கயாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஷ்டிரா நிலம் (அரசு நிலம்) சீதா நிலம் (விவசாய நிலம்) என

வடக்கில் இரண்டு வித நிலங்கள் இருந்தன. நிலம் சொத்தாக்கப்படும் நிலை ஏற்பட்ட பொழுது மக்கள் பட்டினி, வறுமை குறித்த நிறையக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

உத்தரபதாவில் தாமிரச் சுரங்கங்கள் இருந்தன. தக்சிணபதாவில் இரும்பு, தங்கம் கிடைத்தன. மகாராஷ்டிரத்தின் பைத்தன், கர்நாடகத்தின் தங்கச் சுரங்கங்களும் போட்டிக்குரியவையாக இருந்தன. இந்த வழியைத் தம் கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆதரவுக்குள்ளும் கொண்டுவந்தவர்கள்

மௌரியர்கள். மௌரிய அரசால் கோசலம் உட்பட எல்லா மஹாஜனபதங்களும் அழிக்கப்பட்டன. வடக்கில் ஏற்படுத்திய ஆதிக்கத்தை மௌரிய பேரரசால் தெற்கில் செலுத்த இயலவில்லை.

**இரண்டாம் நகரமயமாக்கலில் அரசின் பங்கு:**

ஒவ்வொரு நகரும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து கிடைக்கும் வரிவருவாயின் அடிப்படையிலே கட்டமைக்கப்பட்டுள்ளது.

வரியானது தானியங்கள், கால்நடைகளாகவும், தினசரி உற்பத்திப் பொருள்களாகவும் பெறப்பட்டது. கடன்சார்ந்த அடிமைமுறை இருந்தது.

வரி வசூலை முறைப்படித்தி எளிதாக்கவே நாணயமுறையும் கணித அறிவும் ஏற்பட்டது. ஒவ்வொரு நகரத்திலும் அதற்கான கணக்குகள் நிர்வகிக்கப்பட்டன.

அரிசியை கங்கைப் பகுதியில் நீர் தேங்கும் பகுதியில் அதிகம் உற்பத்தி செய்ய முடிந்தது. அரிசி கோதுமையை விட எளிதில் செரிக்கும் தன்மை பெற்றுள்ளதால், அது குழந்தைகளுக்கு 6 மாதத்திலே பால்குடியைக் குறைத்து திட உணவைத் தர உதவியது. பெண்களை விரைவில் உழைப்பில் ஈடுபடுத்த முடிந்தது. தென் கிழக்கு ஆசியாவின் நெல்வகைக்கும், கிழக்கிந்திய வகைக்கும் உருவான கலப்பினம் அதிக உற்பத்தித் திறன் கொண்டதாக இருந்தது. அமைப்பாக்கம் பரவலாக்கப்பட்டு இருந்தது,

அசோகரின் நினைவுச் சின்னங்கள் கங்கைப் பகுதியில் காணப்பட்டதாகவும் தெரியவருகிறது அசோகன் ஸ்தூபிகளில் தொழில் அடிப்படையிலான அலகுகள் காணப்பட்டன. தொழில் அடிப்படையிலான உற்பத்தி அலகுகள். குலா என்பது தொழில்முறை அலகுகளாக இருந்தது, கஹனதி, தாசா, கர்மகார், வன்னியர், பற்றிய குறிப்புகள் இருந்த போதிலும் வர்ணம், ஜாதி பற்றிய குறிப்பீடு இல்லை.அசோக அரசு எல்லா மதங்களுக்கும் சம நிலை அளித்தது.

அர்த்தசாஸ்திராவில் சுரங்கம் என்பது போர்க்கருவிகளின் கருவறையாகப் பார்க்கப்பட்டதாகவும், அரசர்களின் போர் வெற்றி அவர்களின் யானைப் படையைச் சார்ந்திருப்பதாகவும் குறிப்பிடபட்டுள்ளது.

பிற நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் மீது படையெடுத்து வல்லாதிக்கத்தால் தங்களோடு இணைத்துக் கொள்வதும், சமரசம் செய்ய அவர்களின் ஆதிக்க வர்க்கத்தில் ஒரு சிலருக்கு உயர் அந்தஸ்து வழங்குவதுமான முறை இருந்தது.

விவசாயிகளும்,ஆயர்களும் இடையுறவு கொண்டிருந்தனர். ஜனபதங்களில் உள்ள சத்திரிய

குலம் நிலங்களைப் பொதுவாக ஆளுகை செய்தது. கர்மகார்களால் நிலம் உழப்பட்டது.6ஆம் நூற்றாண்டில் இனக்குழுத் தலைவர்கள் சத்திரியர்கள் என அழைக்கப்பட்டனர். சபைகளில் நிலம் உள்ளவர்களுக்கே ஓட்டுரிமை இருந்தது.

ஆயர்கள் எருதுகளைப் பலியிட்டனர், பலமான இரும்புக் கலப்பைகளைக் கொண்டு எருதுகளால் மட்டுமே உழ முடியும், மரக் கலப்பைகளைக் கொண்டு, கழுதைகள், மற்ற சிறு விலங்குகளால் உழ முடியும், வேளாண்மை செய்யும் குடியானவர் சமூகத்தில் எருதுகள் பலியிடுவது தடைசெய்யப்பட்டது. பிராமணீயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மதங்கள் வேளாண்மைக்கு மாறும் போது ஏற்பட்டன.

பெண்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டனர். விவசாயத்தில் ஈடுபடாதவர்கள் போரில் ஈடுபட்டனர், அரச வன்முறை தொடர்ந்து அனுமதிக்கப்பட்டது. அகிம்சையைக் கடைபிடித்த அரசர்கள் படையெடுப்பை நிறுத்தவில்லை என்பதே வரலாறு.

**சாதி, வர்க்கம், பிராமணிய அமைப்பு:**

பிராமணியத்தின் கர்மா, மறுபிறப்பு, உயிர் கொல்லாமை புத்தம் மற்றும் சமணத்திலிருந்து பெறப்பட்டது. வர்ணா என்பது சாதிகளின் சித்தாந்த அடிப்படையாக கோட்பாடாக இருந்தது.

இரண்டாம் நூற்றாண்டு பொ.ஊ.மு-லிருந்து மூன்றாம் நூற்றாண்டு பொ.கா.மு சாதி அமைப்பு உருப்பெற்று, நிலை பெற்றது. உயர்சாதிகள் அதிலும் முக்கியமாக ஆண்கள் மத்திய ஆசிய மரபு குறியீடுகளைப் பெற்றுள்ளனர்,

ஆர்.எஸ்.எஸ் கூறுவது போல் இந்திய வரலாறு போற்றத்தக்க இந்து ராஜ்யத்தின் வரலாறாக இருக்கவில்லை. சுபாஸ் சந்திரபோஸின் கூற்றுப்படி இந்தியாவின் பெரும்பான்மையான பகுதி எந்த இந்து மன்னனின் ஆளுகையிலும் வரவில்லை, இந்தியாவில் பெரும்பரப்பில் ஆட்சியை நிலைநாட்டியவர் இருவர், முதலாமவர் புத்தமதத்தை சேர்ந்த அசோகர், இரணடாமவர் இஸ்லாத்தை சேர்ந்த அக்பர்.

குப்தர்கள் பொ.கா. 3ஆம் நூற்றாண்டில் ஆட்சியமைத்தனர். குப்தர் ஆட்சிக்காலத்தில் புத்தம், சமணம், ஆசீவகத்தின் மீது பிராமணியம் வெற்றி பெற்றது. ஆட்சி அதிகாரம்,மதங்களிலிருந்து பிரிக்கப்பட்டது.ஆதிக்கசக்தி மேலோரிடமிருந்து, மூதாதையரிடமிருந்து பெறப்பட்டதாக கூறப்பட்டது. அவர்கள் செய்ய விரும்பிய ஒவ்வொரு மாற்றத்தையும் நியாயப்படுத்த முன்னோரிடம் பெறப்பட்டதாக கூறும் மரபு காணப்பட்டது.

தர்ம சூத்ரா -- மனுதர்மத்தின் காலகட்டம் 200 பொ.ஊ.மு. 200 பொ.ஊ என அறியபடுகிறது. தர்ம

சாஸ்திராவைத் தொடர்ந்து அனைத்தும் மனுவையே நீதி வழங்குபவராக ஏற்றுக்கொண்டது. மனுதர்ம சாஸ்திரம் அரசின் நிர்வாகம் குறித்தும் மனுதர்மம் போதிக்கிறது. அரசர்கள் மனுதர்மத்தையே ஆதரித்தனர். மனுவின் தர்மசாஸ்திரம் புதிய மரபின் உரைவடிவமாக அமைந்தது.

வரலாற்றிலிருந்து மகதப் பேரரசும் அசோகரும் முழுமையாக மறைக்கப்பட்டனர். பிரிட்டிஷார் இந்தியாவின் எல்லாப் பாரம்பரியமும் பிராமணியத்திடமிருந்து பெறப்பட்டதாகவே நினைத்திருந்தனர்.அசோகர் மறைக்கப்பட்டார், பிரியதர்சினி என்று அசோகர் அழைக்கப்பட்டதும் அசோகரின் வரலாறும் சிங்கள உரைகளின் மூலமே அசோகரின் வரலாறு தெரியவந்தது. குப்த அரசர்களே போற்றப்பட்டனர்.

2-3 நூற்றாண்டு அகமணமுறை நடைமுறைக்கு வந்தது. சாதி அமைப்பு நிலைபெற்றது. அப்பொழுதிலிருந்தே ஆணவக் கொலை ஆரம்பமானது. வாழ்விடங்களைப் பிரிப்பதன் மூலமும், அகமணமுறையின் மூலமும் சாதிகள் நிலைநிறுத்தப்பட்டன. மற்ற இன மக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கிராமங்களுக்கு வெளியே வாழ்ந்தனர்

நகரமைப்புகள் சிதைந்து, வணிகம், பணத்தின் சுற்றோட்டம் குறைந்தது .பெருமளவில் விவசாயம் செய்யப்பட்டது. மத்தியப்படுத்தப்பட்ட மகத அரசு, குப்தர்களின் காலத்தில் பரவலாக்கப்பட்டது.

மௌரியத்திலிருந்து குப்த வம்சம் ஆட்சிக்கு வந்த போது அதிகாரப் பரவலாக்கம். நிர்வாக அதிகாரம் குறுநில மன்னர்களுக்கும், ,நிலக்கிழார் களுக்கு பிரித்தளிக்கப்பட்டது. குறுநில மன்னர்கள், நிலக்கிழார்களிடம் கப்பம் பெறப்பட்டது, குப்த அரசானது பரவலாக்கப்பட்ட அரசாக, நிலக்கிழாரியத்தைப் பாதுகாப்பதாக இருந்தது.பிராமணியம் கிழாரியத்தை முறைமையுடையதாகவும் சட்ட பூர்வமானதாகவும் ஆக்கியது.

புத்தமும், சமணமும் பிராமணியத்தை எதிர்ப்பவையாக இருந்த போதிலும் தனிமனித விடுதலையையே (உங்கள் வீடுபேற்றை/ விடுதலையை நீங்களே அடையவேண்டும்) போதிப்பவையாகவே இருந்தன.

சார்வாகா, லோகயதா ஆகியவை மதங்களுக்கு எதிரானவை என மதிக்கப்படவில்லை. அவை ஆதிக்கசக்திகளுக்குப் போட்டியானவையாகப் பார்க்கப்பட்டன.சார்வாகா,லோகயதா பிராமணியத்தை, எதிர்த்து சவால் விடுவனவாக அமைந்தன.

**சாதி அமைப்பின் பரிணாமம்:**

சாதி என்பது பழைய வர்ண அமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட, தன்னைத்தானே

மறுவுற்பத்தி செய்து கொள்ளும் நிலையான மக்கள் தொகுதி.

சாதி அமைப்பு கர்மா, மறுபிறப்பு, மறு ஜென்ம வாழ்வில் ஜாதி மாற்ற வாய்ப்பு ஆகியவற்றை கொண்டிருந்தது. பிராமணிய அமைப்பில் சாதிகள் உயரவும் முடியும், தாழவும் முடியும்.ஆனல் தனியொருவர் சாதி வரம்புகளைத் தாண்ட முடியாது. பணம், செல்வத்திற்காக எதையும் தளர்த்திக் கொள்ள புரோகித வர்க்கம் தயாராயிருந்தது. சாதிப் பாரம்பரியம் என்பது கட்டுக்கதையாக உருவாக்கப்பட்ட து.ராணுவ பலத்தின் மூலம் தங்களை சத்திரியர்களாகவும் இறைதொடர்பு கொண்டவர்களாகவும் பிராமணர்களை ஏற்கவைக்க முடியும் நாடு பிடிப்பு, போர்த்திறத்தின் மூலம் தன் பிறப்பின் அடிப்படையைத் தாண்டி சத்திரியர்களாக உயரமுடியும்.இந்தோ பாக்டிரீயர்களும், இந்தோ ஸ்கைத்தியர்களும் சத்ரிய குலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

ஆனால் பிராமணர் ஆவது மிகக் கடினம், சமஸ்கிருதத்தில் மத,அறிவியல், சாஸ்திரங்களை அறிந்திருக்க வேண்டும், கல்வியறிவு புரோகித வர்க்கத்தின் முற்றுரிமையாக இருந்தது. கணிதம், அறிவியல் அனைத்துமே சமஸ்கிரத வாய்வழி மரபின் மூலம் மட்டுமே அறியவேண்டியிருந்தது. சீனாவில் பொ.ஊ.மு1ஆம் நூற்றாண்டில் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. உரை நடை, எழுத்துமுறை என்பது அறிவைப் பரவலாக்கி ஜனநாயகப்படுத்த உதவுகிறது, ஒரு பிற்போக்கான சர்ச் கூட பலருக்குக் கல்வியறிவூட்டியிருக்கிறது.

ஆனால் இங்கோ புரோகித வர்க்கத்தின் ஆதிக்கத்தில் வாய்வழி அறிவு மரபின் மூலம் அறிவைப் பரவ விடாமல் தடுத்து பிராமணியம், சாதி ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.அதுவே வரலாற்றை சரியாகப் பதிவு செய்யாததற்கும் காரணமானது. பிராமணர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதும், அரசர்கள் படிப்பறிவில்லாதவர்களாக இருப்பதும் வழக்கமாயிருந்தது. பெண்களும் கீழ்சாதிகளும் பிராகிருதம் பேசியதாகவே அறியப்படுகிறது.

சாதியும் உபரி அபகரிப்பும்: பிராமணிய சமூகம் எல்லாவற்றையும் தன்வயமாக்கும் பண்பைப் பெற்றது.மற்ற இனக்குழுக்களை வல்லாதிக்கம் மூலம் இணைத்துக் கொள்வதாகத் தள்ளிவைத்து அடிமையாக்கி அவர்களின் கடவுளைத் தங்கள் கடவுள்களுக்கு அடிமையாக்கினர்.அவ்வாறு தான் அனுமனும் ராமபக்தர் ஆக்கப்பட்டார்.

விவசாயிகளாக, கைவினைஞர்களாக இருந்த சூத்திரர்கள் ஆயுதங்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சாதியற்றவர்கள் ஆயுதங்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லைஉழைப்புப் பரிமாற்றம் என்பதை விட உழைப்பு அபகரிப்பே

நடைபெற்றது.

மக்களைப் பிறப்பின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வேலையை மட்டுமே செய்யக் கட்டுப்படுத்தும் உழைப்பு ப் பிரிவினையின் மூலமே உற்பத்தியும், மறு உற்பத்தியும் நடைபெற்றது.

சமூகம் நீடித்திருக்க உற்பத்தியே அடிப்படை ஆனால் உற்பத்தியில் ஈடுபடாமல் இருப்பவர்களே உயர்சாதியினாராக அழைக்கப்பட்டனர். உழைப்பு புனிதமற்றதாகக் கருதப்படுகிறது, உழைக்காமல் இருப்பதே புனிதமாகக் கருதப்படுகிறது.பிராமணர்களோ, சத்திரியர்களோ, வணிகர்களோ, வட்டிவாங்குபவர்களோ (திவிஜா -இரு முறை பிறந்தவர்கள்)உழைப்பில் ஈடுபடவில்லை, மற்றவர்கள் உழைப்பால் அசுத்தப்படுத்தப்படுகிறார்கள்.

உழைப்பு என்பதே அசுத்தமானதாகக் கருதப்பட்டது. உழைப்பின் தன்மையை வைத்துத் தூய்மையின் அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டது.உழைப்பின் தன்மையின் அடிப்படையில் ஒரு சாதி மற்றொரு சாதியிலிருந்து வேறுபடுத்தப்பட்டது . கீழ்ச்சாதிகளாகக் கருதப்பட்ட சூத்திரர்கள் விவசாயிகளாகவும், கைவினைஞர்களாகவும், படைவீரர்களாகவும் இருந்தனர்.சாதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் கிராமங்களுக்கு வெளியே தங்கினர், இறந்த விலங்குகளின் தோலை உரிப்பது இழிவானத் தொழிலாகப் பார்க்கப் பட்டது.மனிதர்கள் நாடோடிகளாக இருந்தபோது கழிவுகளை உடனுக்குடன் தூய்மை செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை, ஆனால் ஒரே இடத்தில் நிலைத்து குடியமைத்தவுடன், கழிவுகள் துப்புறவாக்கப்படாமல் இருந்தால் நீரால் பரவும் நோய்கள் பரவுவதற்கு வெப்பமண்டலப் பகுதிகளில்அதிக வாய்ப்புகள் இருந்தது. துப்புரவாக்குவது முக்கியத்துவம் பெற்றது.

போர்த்திறமும் விழிப்பும் உள்ளக் காட்டு வாழ் மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இயலவில்லை.

சாதிப் பஞ்சாயத்துகள் செயல்பட்டன.சாதிக் கட்டமைப்பால் அறிவியலும், தொழில்நுட்பமும் பிரிக்கப்பட்டதால் அறிவியல் தொழில்நுட்ப மும், அறிவு வளர்ச்சியும் தடைபட்டது.மனப்பாடம் செய்யும் கல்விமுறையால் ஆய்வுத் திறன், கேள்விக்குட்படுத்தும் திறன் குறைந்ததுபுதியத் தொழில் நுட்பம் புதிய சாதியைத் தோற்றுவிக்கும் ஆனால் புதிய சாதிகள் உருவாவது தடைசெய்யப்பட்டிருந்தது இதனால் தொழில் நுட்பத்தில் எளிதாக மாற்றமோ வளர்ச்சியோ ஏற்படாமல் சமூகவளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. கட்டிடக் கலை வளர்ச்சிக்கு அதுவே தடையாக இருந்துள்ளது. வில் வளைவுகள், குவிமாடம் பால்பன் காலத்தில் 13ம்

நூற்றாண்டிலே தான் மெஹ்ரலியில் அமைக்கப்பட்டது.

**வரலாற்றின் மார்க்சியக் கோட்பாடு**:

வரலாற்றில் மெய்மைகளின் அடிப்படையிலே கோட்பாடுகளைப் பெற வேண்டும். கோட்பாட்டின் அடிப்படையில் மெய்மைகளைக் காணக் கூடாது. வரலாற்றை ஆய்வு செய்யும் போது அனைத்தையும் நேரியல் மாற்றங்களாய் நிகழ்ந்தவையாகக் கருதாமல் கவனத்துடன் நோக்க வேண்டும்.எல்லாப் பகுதிகளிலும் ஒரேமாதிரியான சமூக மாற்றங்களும், வளர்ச்சியும் ஒரே காலகட்டத்தில் நிகழ்ந்தவை அல்ல,அவற்றிற்கிடையே பொதுவான போக்குகள் காணப்படலாம்.ஆனால் அவை யாவும் முற்றொருமித்த நிகழ்வுகள் அல்ல.

மனிதர்களை மற்ற விலங்குகளிலிருந்து வேறுபடுத்துவது, மரபியல் அடிப்படை, உயிரியல் அடிப்படை என்பதைத் தாண்டி சமூக அடிப்படையே முக்கியப் பங்கு பெற்றுள்ளது. மனித சமூகம் என்பது சமூகப் பரிணாமங்களின் விளைபொருள். கற்காலத்தில் இரை தேடி வேட்டையாடித் திரிந்த மனிதர்கள் புதிய கற்காலத்தில் விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். உலோகக் காலத்தில் நகரமயமும், அரசும் தோன்றின.

உயிரியல் மாற்றங்கள் மெதுவானவை. சமூகமயமாக்கலால், மொழி, உரைநடை வாயிலாக அறிவுப் பரிமாற்றம் துரிதமாகியுள்ளது. மக்கள் வரலாற்றைப் படைத்தாலும் அவர்கள் விரும்பியவாறு படைக்கவில்லை, சமூகக் கட்டமைப்பின் நெறிகளுக்குட்பட்டே படைத்துள்ளனர். எழுதப்பட்ட வரலாறுகள் யாவும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே.

அரசியல், கலை, மதம் என எல்லா மனித நடவடிக்கைகளுக்கும் உற்பத்தியும் மறுவுற்பத்தியுமே அடிப்படையாக உள்ளன. உற்பத்தி என்பது சமூகத்தின், சமூக உறவுகளின் மறு உற்பத்தியையும் உள்ளடக்கியதாகும்.

உற்பத்தி என்பது வெறும் இயற்கை நிகழ்வோ அனிச்சைச் செயலோ அல்ல, விவசாயம், கால்நடை வளர்ப்பு அனைத்துமே குறிப்பிட்ட இலக்கை/விளைபொருளை நோக்கமாகக் கொண்ட மனிதர்களின் இடையீட்டு நடவடிக்கைகளே (purposive intervention) ஆகும்.

அரசும் மதமும் தனியார் சொத்துடைமையைக் கட்டிக் காக்கும் அமைப்புகளாக உள்ளன. மதம் என்பது தற்பொழுதுள்ள சமூக சமமின்மையை அங்கீகரிக்கும் அமைப்பாக மட்டும் இல்லை. அதற்கான நியாயம் எதிர்காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தந்து ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகத்தின் இதயமாகவும் உள்ளது.

மார்க்சிற்குக் கிடைத்த காலனியாதிக்க பிரிட்டனின் தரவுகள் இந்தியச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பிரதிபலிக்க இயலாததால் அதிலிருந்து பெறப்பட்ட கருத்தாக்கமான ஆசிய

உற்பத்தி முறை என்று தனியாக ஒன்று இல்லை என்றே கூற வேண்டும்.

அறிவியலும் தொழில்நுட்பமும் பிரிந்துள்ளதால்,உடலுழைப்பில் ஈடுபடுபவர்கள் , அறிவியலுக்கான அடிப்படை அறிவைப் பெற வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அறிவியல் அறிவைப் பெறும் வகையில் உள்ளவர்களுக்கு நடைமுறை அறிவு இல்லை.

நவீனத் தொழிற்சாலைகளில் மனித உழைப்பு இயந்திரமயமாக்கப்படுவதால் அந்த இயந்திரத்தை இயக்கும் திறனே ஆக்க உழைப்பாக உள்ளது, உற்பத்தி சாதனங்கள்அந்நியப் பகுதியிலிருந்து வருவதால் அந்நிய மொழித் திறன் உள்ளவர்களாலே திறனுள்ள உழைப்பாளிகளாக முடியும். அது அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கப் பெறாததால் அவர்கள் ஆக்கத் திறனுள்ள உழைப்பாளர்களாக தகுதியடையத் தடையாக உள்ளது, இந்தியாவில் வர்க்க அமைப்புக்குள் சாதி அமைப்பு மறுஉற்பத்தி செய்யப்படுகிறது,சாதியும், இனமும் கோட்பாடுகளாக மட்டுமில்லாமகல் உற்பத்தி அமைப்பில் ஆழமாக ஒன்றிணைந்துள்ளன. இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் பிராமணியத்தை வெறும் கருத்தியலாக மட்டுமில்லை, பழைய கருத்தியலின் மீதமிச்சங்களாக மட்டும் இல்லை சமூக , உற்பத்தியில், மறுஉற்பத்தி யில் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

(தொடரும்)

## ஃபிடலால் ஆட்கொள்ளப்பட்டு

**செம்போத்து**




உங்களில் ஒருவராய் ஃபிடலை இழந்து துயர்கொண்டேன்

ஏற்க இயலவில்லையே! இதுவும் இன்னொரு புரளியாகாதா!

நூறு வயது கடந்து அவரைக் காணும் கனவு நிறைவேறவில்லையே

அவரை உடனிருந்து பார்க்க, பேச கண்ட கனவுகள் கானலானதே

ஃபிடலாகும் கனவு ஒருபோதும் நிறைவேறாமல் போகாது!

தூக்கமிழந்து நிகழ்காலம் மறுத்து ஃபிடலின் கடந்தகாலத்தில் வாழ்கிறேன்

அதோ குழந்தைகளுடன், இருந்த ஃபிடல் படைவீரர்களுடன்

அதோ விவசாயிகளுடன் பேசிய ஃபிடல் பொறியியலாளர்ளுடன்

புரட்சிக் கலையின் கதாநாயகன் ஃபிடல் காஸ்ட்ரோ

புரட்சியின் ஆளுருவம் நம் ஃபிடல் காஸ்ட்ரோ

பேரன்பும் முழுமையாக ஃபிடலாக மலர்ந்தது

வல்லாதிக்க அசுர முதலையின் கொடிய வாயருகிலும்

உழைப்பு, போராட்டம் என இரட்டைப் பணிகளை

நிறைவேற்றும் பிடலின் தன்னெழிச்சி பெற்ற கியூபர்கள்

கல்வி, மருத்துவம்,இயற்கை வேளாண்மை

என வெற்றியைக் குவித்தனர் துறைதோறும்

திருத்தல்வாதத்தால்

சோவியத் யூனியன் சோசலிசத்திலிருந்து அயன்மைப்பட்டபோதும்

சந்தைப் பொருளாதாரத்திற்காக

சீனா சோசலிசத்திலிருந்து அயன்மைப்பட்டபோதும்

ஊடகங்கள் தடயமில்லாமல் அருங்காட்சியகத்திலும்

சோசலிசத்தை நீக்க முயன்ற போதும்

கியூபாவே மக்களின் நம்பிக்கையாகவும் இலக்காகவும் இருந்தது

அதுவே மக்களுக்கு சுதந்திர தாகத்தை ஊட்டியது

நவீன அடிமைத் தனத்தின் தளையறுக்க உத்வேகமிட்டது

ஒருபோதும் மார்க்சிய லெனினியத்திலிருந்து அயன்மைப்படவில்லை

ஃபிடலின் கோட்பாடு

ஒருபோதும் கோட்பாட்டிலிருந்து அயன்மைப்படவில்லை

ஃபிடலின் நடைமுறை

ஒருபோதும் மக்களிடமிருந்து அயன்மைப்படவில்லை

ஃபிடலின் நடைமுறை

ஜனநாயகத்தின் இரட்டையாய் ஏகாதிபத்தியத்தைக்

குடியரசுகள் சட்டமாக்கிய போது ஏகாதிபத்திய ஜன நாயகத்தை எள்ளி நகையாடினார் ஃபிடல்

நுகர்வுக் கலாச்சாரத்தின் சுற்றுச்சூழல் விளைவை எச்சரித்தார் ஃபிடல்

ஐநா வீட்டோவின் கொடுங்கோன்மையை கண்டனம் செய்தார்

தனியார்மயமே பொருளாதாரத் தீர்வாக போதிக்கப்பட்டபோது
தேசியமாக்கத்தையும், நீடித்த பொருளாதாரத்தையும் அடிக்கோடிட்டார்
பொருளாதாரக் குறியீடுகள் மக்களை குழப்பிய போது ஃபிடல் எளிமைப்படுத்தினார்

கியூப விவசாயியின் வியர்வையில் ஒரு பெசோ கூட வரியாகவில்லை
கியூப மாணவனிடமிருந்து ஒரு பெசோ கூட கருவூலம் போகவில்லை
மக்களல்லவா கியூபாவின் உண்மையானக் கருவூலம்
நெறியிழந்த உலகில் அறநெறியில் வாழும் கியூபர்கள்
மனித உறவுகளைப் போற்றி வாழ்வைப் பகிர்கின்றனர்
குழந்தைகளுக்கு அறத்தையும், மனிதத்தையும் புகட்டுகின்றனர்
விளம்பரங்களிலோ, தனி நபர் வழிபாட்டிலோ குருடாகாமல்
தன்னுணர்வுடன் தேர்வுசெய்யும் சுதந்திரத்தை தக்க வைத்த கியூபர்கள்
அரசியல் கூட்டுணர்வால் இணைந்து ஏகாதிபத்தியத்திற்கு
சாவுமணி அடிக்கின்றனர்
நாடுகள் காப்புரிமையிலும் அறிவு சொத்துடைமையிலும்,
டிரில்லியன்கள் சம்பாதித்த போது
கியூப தொழில்நுட்பத்தையும், முன்னேற்றத்தையும்
உலகிற்குப் பகிர்ந்தளித்தார் ஃபிடல்
தற்காப்பிற்கே படைகளைப் பரிந்துரைத்தாரே அன்றி
அயல்ஆதிக்கத்திற்கு அல்ல
எந்த பலனையும் எதிர்பாரா ஃபிடலின் அன்புச்சேவை
உலகெங்கும் நீண்டது. தேவையின் போது

சுயவிமர்சகர் ஃபிடல்
பாராட்டுக்களால் மயங்கவும் இல்லை,
அவதூறுகளால் கலங்கவும் இல்லை
ஃபிடலின் பேரன்பால் திண்மையால்
ஃபிடலின் வீரத்தால், இயங்காற்றலால்
ஆட்கொள்ளப்பட்டோம் மனிதத்தை உயிர்ப்பிக்க

ஃபிடலால் ஆட்கொள்ளப்பட்ட நாம் ஃபிடலிடோக்கள் ஆகிறோம்,
ஒன்றிணைந்து நெடு நடையில் கொல்வோம் ஏகாதிபத்தியத்தை
எங்கும் என்றும் தொடரட்டும் நம் ஃபிடலின் வெற்றிப்பாதை,
வரலாற்றில், நம்மில் நம் செயல்பாடுகளில் வாழும் புரட்சியாளர்
நம் ஃபிடல் காஸ்ட்ரோ என்றும் என்றென்றும் நீடூழி வாழ்க!
புரட்சிகர கியூபா நீடூழி வாழ்க!

## நான் ஏன் தமிழ்த் தேசியவிடுதலை இயக்கத்தில் சேர்ந்தேன்?

வே.செல்வமுருகன்



சோசலிசம் நீடூழி வாழ்க!

பகுத்தறிவு விரிவடையும் பொழுது அது பொதுவுடைமை என்பதை வந்தடையும்

நானும் அப்படித் தான் பொதுடைமை வந்தடைந்தேன். புரட்சிகர இயக்கங்களின் நடைமுறையால் ஈர்க்ப்பட்டு மா.லெ அமைப்பில் செயல்பட்டேன் இந்தியப் பாட்டாளிவர்க்க விடுதலை என்று முழங்கியும் வந்தேன். அகில இந்திய புரட்சி நடத்த முதல் நிபந்தனையே ஒரு கட்சி ஒவ்வொரு மாநிலத்துக்கும் கிளை பரப்பியிருக்க வேண்டும்.ஆனால் உண்மை என்ன.எந்த அகில இந்திய புரட்சிகர மா.லெ கட்சிக்கும் கிளைகள் இல்லை. அவ்வாறு கிளைகள் இருக்கும் பொழுது அது தேசிய இன விடுதலைக்கு குரல் கொடுப்பதும் தேசிய இன விடுதலையை ஆதரிப்பதும் அதன் கடமை ஆகிறது.ஆனால் இந்தியாவில் அது போன்ற நிலைமை இல்லை.

இந்திய பூகோள அமைப்பு பல்வேறு தேசிய இனங்களை கொண்ட நாடு என்பது நமக்குத் தெரியும்.ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் மொழி, பண்பாடு,பொருளாதாரம், நிலத் தொடர் உள்ளது. எல்லா தேசிய இனங்களும் ஒடுக்கப்படுகிறது. எந்த தேசிய இனம் விழிப்புணர்வு கொள்கிறதோ அந்த தேசிய இனம் விடுதலைக்குப் போராடுகிறது. இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்று எல்லோராலும் ஏற்றுகொண்ட பிறகு தத்தமது இனவிடுதலைக்கு

போராடுவது என்பது முதன்மை வேலைத்திட்டமாக மாறுகிறது.

இந்த சூழல் இல்லாத நிலையில் தமிழ் தேசிய இனம் ஏன் தன் விடுதலையை கோரமுடியாது இந்த கேள்வி எழுவது இயல்பானது தானே ஒட்டு மொத்த புரட்சி, நாடு தழுவிய புரட்சி என்றெல்லாம் பேசி காலம் கடத்துவதும் ஒடுக்குமுறையை சகித்துக் கொள்வதும் என்ன நீதி இருக்க முடியும்.

உதாரணமாக ரசிய தேசிய இனம் தமது பாட்டாளிவர்க்க புரட்சிகர விடுதலையை தானே தன் ஆளும் வர்க்கத்தினை எதிர் கொண்டது புரட்சி வெற்றி அடையும் தருவாயிலும் அதன் பிறகும் பல தேசிய இனங்கள் லெனின் அறைகூவலை ஏற்று சோவியத் யூனியன் என்ற பெயரில் இணைந்து கொண்டன அங்கு பிரிந்துபோகும் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து தேசிய இனங்களின் உரிமையைப் பாதுகாத்தது இளம் பாட்டாளி வர்க்க அரசு.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், நாகாலாந்து, மணிப்பூர் போன்ற தேசிய இனங்கள் தங்களுடைய விடுதலைக்காகப் போராடி வருகின்றன இந்திய ஏகாதிபத்தியம் அந்த தேசிய இன விடுதலை இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.இத்தகைய பேச்சுவார்த்தைகளையும், அதன் போராட்டங்களையும் பிற மாநில மக்களுக்கு அறியா வண்ணம் பத்திரிக்கைகளும், அரசும் பார்த்துக் கொள்கின்றன.

தேசிய இன விடுதலையை ஒரு தேசிய இனம் தன் விடுதலையை எப்போது முன்னெடுக்கிறது சமூகப் பொருளாதார சுரண்டல் அரசியல் உரிமை மறுப்பு அதன் வளங்கள் அழிக்கப்படுவது அதன் மொழி அழிக்கப்படுவது என்பதிலிருந்து தான் அதன் இனவிடுதலை தொடங்குகிறது.

அகில இந்திய புரட்சி பேசும் கட்சிகள் தேசிய இனங்களின் விடுதலை பற்றி பேசுவதில்லை. இந்திய தேசிய பெருமிதத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள் அகில இந்தியப் புரட்சிவாதிகள். எனவே தான் தனி நாடு கொடு எனக் கோரினால் பார்ப்பன இந்து மதவெறி கும்பலைப் போல அகில இந்தியப் புரட்சிக்காரர்கள் பதறுகிறார்கள்.

இந்தியாவின் இனச் சிக்கலை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமானால் இந்தியா தேசிய இனங்களின் சிறைகூடம் என்ற சிறைகூடத்தை உடைத்தெறிய வேண்டும் என்று சொல்பவர்களை இனவெறியர்கள், பிரிவினைவாதிகள், மொழிவெறியர்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

ஒவ்வொரு தேசிய இனமும் தன் விடுதலையைத் தானே முன்னெடுப்பதன் மூலமாக பிற தேசிய இனங்களின் ஐக்கியத்தைக் கோர முடியும் அப்படி எல்லா தேசிய இனங்களின் ஜனநாயக

சக்திகளுடன் ஒன்றுபட்டு ஓர் ஒன்றிய அரசை அமைக்க முயற்சிக்க முடியும். ஒட்டுமொத்தப் புரட்சி என்று சொன்னவர்கள் இந்த எழுபது ஆண்டுகளில் தேசிய இனச்சிக்கலை எப்படி அனுகினார்கள் என்பதை நாம் பார்த்தோம்.அகில இந்திய புரட்சிகர இயக்கங்களின் நிலைப்பாடு "கானல் நீராகவே" உள்ளது.

முதலில் இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் விடுதலை அடையட்டும் அந்த தேசிய இனங்கள் இணைந்து இருப்பதா அல்லது தனித்தனியே இருப்பதா என்பதை அந்தந்த தேசிய இனங்கள் முடிவு செய்யும். நாம் எந்த தேசிய இனத்தையும் ஒடுக்கவோ, சுரண்டவோ, விடுதலை கேட்கவில்லை எமது பிரதேசத்தையும், எமது மக்களையும், எமது மொழியையும், பண்பாட்டையும் பாதுகாத்துக் கொள்ளவே இந்திய ஏகாதிபத்தியத்திடம் விடுதலை கோருகிறோம்.

பிற தேசிய இனங்களின் விடுதலைக்குத் தோள் கொடுப்பதும், ஊக்கமளிப்பதும்,அதன் உரிமைகளை ஜனநாயகபூர்வமாக மதிப்பதும் ஒரு தேசிய இனத்தின் கடமையாகிறது.

இன்றுள்ள உலக அரசியல் சூழலில் தனிதேசிய இன விடுதலை என்பது எளிதான காரியம் இல்லை என்பது புரிகிறது.ஈழ விடுதலைப் போராட்டமே அதற்கு உதாரணம். எனினும் பூனைக்கு மணி கட்டித்தான் ஆகவேண்டும் மண்ணில் விதைகள் முட்டி மோதி முளை விடுவதைப் போல இந்திய ஏகாதிபத்தியத்தை எதிர்கொண்டு தான் ஆக வேண்டும் உலகத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள நாடுகளின் அரசியலில் ஏகாதிபத்தியங்கள் தலை இடுகின்றன என்பது உண்மை தான் ஆனாலும் இந்திய ஏகாதிபத்தியத்தை ஒரு உலுக்கு உலுக்கினால் மட்டும் தான் மற்ற தேசிய இனங்கள் அவற்றின் விடுதலைக்கு சிந்திக்க வைக்க முடியும் அறிவார்ந்த தமிழ் சமூகம் அதை செய்ய முன்வரும் என்பதில் ஐயமில்லை.

எனவே தான் தமிழ்த் தேசிய இயக்கம் அதனை முன்மொழிவதால் என்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்டேன்.

தோழமையுடன்

வே.செல்வமுருகன்

புதுவை